

# திறவுகோல்

2055 மாசி

மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# அப்பா வருகிறார்...

மின்னஞ்சலைப் பிரித்தவுடன் கிருஷ்ணனுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அவனுடைய அப்பா நிரந்தரமாக சென்னை வரப்போவதாக தெரிவித்திருந்தார்.

இரங்கநாதன் கர்னாடகாவில் தொடர்வண்டி காவலராக பணி புரிந்தவர். கிருஷ்ணனின் அம்மாவுக்கு சென்னையில் பாங்கில் வேலை இருவருக்கும் பணிமாற்றம் கிடைக்கதாமதமானது. ஒரே மகன் கிருஷ்ணனுடன் சென்னையில் வீடு எடுத்து வேலைக்குப் போய்க் கொண்டு கிருஷ்ணனுக்கும் கல்யாணம் ஆனதும் அவன் அம்மா உடல் நிலை சரி இல்லாமல் மரணமடைந்துவிட்டாள்.

மனைவியின் காரியங்கள் முடிந்ததும் ரங்கநாதன் மறுபடி ஊருக்குப்போகவும் கிருஷ்ணனும் அவன் மனைவி ராதாவும் அவரை தங்களுடன் இருக்கச் சொல்லி வற்புறுத்தினர். ரங்கநாதனுக்கு கர்னாடகா மாநிலத்து சாம்ராஜ்நகர் தொடர்வண்டி நிலையம் அருகிலேயே குடியிருப்பில் தான் வீடு. தொடர்வண்டி குடியிருப்பு.

“தினசரி எனக்கு தொடர்வண்டி ஓடும் சத்தம் கேட்காவிட்டால் எதையோ இழந்த மாதிரி இருக்குப்பா கிருஷ்ணா. சென்னையில் நீ இருக்கிற இடம் பக்கம் தொடர் வண்டி நிலையம் கிடையாது. என்னைக் கொஞ்ச நாள் நான் வேலைசெய்த இடத்திலேயே இருக்கவிடு ஆயிற்று அடுத்த வருஷம் ரிடையர் ஆகப்போகிறேன். அப்புறம் நானாகவே வரேனே. உன்கிட்ட வராமல் எங்கே போகப் போகிறேன்பா?” என்றார் ரங்கநாதன்.

சொன்னபடி தன்னோடு அப்பா வந்து இருக்க போவதில் கிருஷ்ணன் மகிழ்ந்து போனான். ராதாவும் ஆவலாய்க் காத்திருந்தாள்.

“கேசவ், ஸ்ரீநிதி... இங்கே வாங்க... உங்க தாத்தா நாளைக்கு சென்னை வராராம்.” என்றவுடன் அவர்கள் இருவரும் கணினி முன்பு தலையை நுழைத்துக் கொண்டு செய்தியை உறுதி செய்து கொண்டனர்.

தாத்தாவுடன் தாயக்கட்டம், பல்லாங்குழி, பரமபதம், கேரம் போர்டு விளையாடலாம். ராமாயணம், மஹாபாரதமும் கேட்கலாம். நடுவில் தெனாலி ராமன் கதை, அக்பர் பீர்பால் என்று தாத்தா கதை சொல்ல நேரம் போவதே தெரியாது. அவர்கள் இருவருமே கனவில் மிதக்க ஆரம்பித்தனர்.

காலையில் கிருஷ்ணனுக்கு முன்னால் அவர்கள் இருவரும் தயாராக இருந்தனர்.

“அப்பா! இன்னிக்கு பள்ளி வேண்டாமே.. தாத்தாவை கூட்டி வருவதை விட பள்ளி முக்கியமா?” என்று அப்பாவை தாஜா செய்தான்.

“இல்லேப்பா. அவனுக்கு இன்னிக்கு பிடிக்காத பாடம். அதனாலதான் பள்ளிக்கு போகலை. வீட்டுப் பாடத்தையும் முடிக்கலை.” ஸ்ரீநிதி பற்ற வைக்க இருவரையும் கிருஷ்ணன் சமாதானம் செய்து உட்கார வைப்பதற்குள் போதும் என்று ஆகிவிட்டது.

செண்ட்ரலில் தூரத்தில் தாத்தாவைப் பார்த்தவுடனே இருவரும் மகிழ்ச்சியில் ஆட ஆரம்பித்தனர்.

அப்பா ஒரு கைப்பை, ஒரு பயணப்பெட்டியுடன் வந்தார்.

அப்பாவின் காலைத் தொட்டு வணங்கி, பெட்டியையும், கைப் பையையும் வாங்கிக்கொண்டான், கிருஷ்ணன்,

கேஷவ்வும், ஸ்ரீநிதியும் தாத்தாவின் தோளில் தொத்திக்கொள்ள, கிருஷ்ணன் காரை நோக்கி நடந்தான்.

“தாத்தா!. எங்களுக்கு என்ன வாங்கி வந்திருக்கே? அதை இப்பவே சொல்லு“ என்று இருவரும் ரங்கநாதனின் கவனத்தை திருப்பினர்.

அவரும் கைப்பையை திறந்து ஏராளமான ப்ரெய்ன் கேம்ஸ், புத்தகங்களை இருவரின் கைகளிலும் திணித்தார்.

கார் ராஜ் பவனையும், மத்திய கைலாஷையும் தாண்டி, அடையார் உள்ளே சாஸ்திரி நகரில் சாய் ராம் குடியிருப்பில் நின்றது.

வீட்டுக்குள் நுழைந்தவுடன், “தாத்தா.. இனிமேல் உங்கள் அறையில் தான் நாங்கள் படுப்போம்.” சுவாதீனமாக ஒட்டிக்கொண்டார்கள் கேசவும், ஸ்ரீநிதியும்.

மறு நாள் காலை ரங்கநாதன் தன்னுடைய பெட்டியை திறந்து துணிகளை அலமாரியில் வைத்தார்.

கிருஷ்ணன் அன்றைய தினசரியில் லயித்திருந்தான்.

ரங்கநாதன் பெட்டியில் இருந்த தன்னுடைய பெயர் பலகையை எடுத்துக்கொண்டர்.

ஆர்.ரங்கநாதன், “ரிடையர்ட் ரயில்வே கார்ட்” என்று ஆங்கிலத்தில் அதில் எழுதி இருந்ததைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டார்.

“டேய். கிருஷ்ணா! இது தான்டா நான் சேர்த்து வைத்த சொத்து. இந்த பெயர்பலகையை உன் வீட்டின் கீழே இருக்கிற எல்லார் பெயரோடும் மாட்டலாமா?” என்று மிகவும் ஆர்வமாய் சன்னமான குரலில் கேட்டார்.

“அப்பா! உன்னை யாருக்கு இங்கே தெரியப் போகிறது? நீ தொடர்வண்டி காவலராக வேலை பார்த்ததெல்லாம் அதிகமாய் கர்நாடகா பகுதியில. இது

சென்னைப்பா. உன்னை எத்தனை பேர் இங்கே வந்து பார்க்கப் போகிறார்கள்?. இதை மாட்ட குடியிருப்பு சங்க அனுமதி வாங்கனும்... வேண்டாமே.. தயவுசெய்து“ என்றான். உள்ளூற அவனுக்கு, இந்த அப்பா கடைசி வரை தொடர்வண்டி காவலராகவே இருப்பேன் எனப் பிடிவாதமாய் அதே வேலையைப் பார்த்தவர். தொடர்வண்டி நிலைய தலைவர் என்றாலாவது பெருமையாய் பெயர்ப்பலகையை மாட்டலாம். ஹ்ம் என்று தோன்றிவிட்டது.

அவன் சொல்வதும் நியாயமாக பட்டது. மீண்டும் பலகையை பயணப் பெட்டிக்குள் திணித்தார். என்னை இங்கே யாருக்குத் தெரியும்? வாய் முணு முணுத்தது.

“பாவம்பா தாத்தா.. ஒரு பெயர்பலகை மாட்ட அடுக்குக் குடியிருப்பு சங்க தலைவர் கோபால் மாமா கிட்டே அனுமதி வாங்க முடியாதா உன்னாலே?” என்று ஸ்ரீநிதி கேட்டே விட்டாள்.

ராதாவும், அதானே? என்றாள்.

கிருஷ்ணன் அதை லட்சியம் செய்யவில்லை.

அன்றிரவு தெனாலி ராமன் கதையும் சத்திரபதி சிவாஜி கதையும் சொல்லி பேரக் குழந்தைகளைத் தூங்க வைத்து ரங்கநாதன் தானும் தூங்கிப் போனார்.

மறு நாள் காலை பொழுது அவ்வளவு வேதனையான செய்தியுடன் ஆரம்பமாகும் என்று யாரும் கற்பனை கூட செய்ய இயலாத அளவிற்கு சோகமான செய்தியை தாங்கி வந்திருந்தது அன்றைய செய்தி தாள்.

கோயம்புத்தூர் - மும்பை இடையே சென்ற விரைவு தொடர்வண்டி, பெங்களூர் தொடர்வண்டி நிலையம் தாண்டியதும் அருகே இரும்பு மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்தது. அப்போது, பயணி ஒருவர் அவசியம் இல்லாமல் அபாய சங்கிலியைப் பிடித்து இழுத்ததால் தொடர்வண்டி இரும்பு மேம்பாலத்தின் மேல் நின்றது உயரமான அபாயகரமான அந்தப் பாலத்தில் தொடர்வண்டி நின்ற நிலையில், அனைவரும் பரிதவித்துப் போயினர். உயிருக்கு ஆபத்தான நிலையில் கூக்குரல்கள். ஒரு பெட்டி கவிழ்ந்துவிடும் போல இருந்தது. நீண்ட நேரப் போராட்டத்திற்குப் பிறகு வல்லுனர்கள் வந்து சரிசெய்து விட்டனர்.

இரங்கநாதன் பணியில் இருந்தபோது இதுபோன்ற ஒரு விபத்தை சந்தித்தத அனுபவத்தை நினைத்துக் கொண்டார். அதை இப்போது மகனிடம் சொல்லிக் கொண்டால் ரசிப்பானோ மாட்டேனா என வாயை மூடிக் கொண்டார்.

இரவு எல்லோரும் சாப்பாடு மேசையில் உட்கார்ந்த போது கூடாரம் தொலைக்காட்சியில் அந்த தொடர்வண்டி, இரும்பு மேம்பாலத்தில் ஆபத்தான நிலையில் நின்று போன நிகழ்ச்சி  ஒளிபரப்பானது. அப்போது

தொடர்வண்டி துறை அமைச்சர், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் தமிழில் அவர் பேசிய உரையும் நேரலையில் வந்தது. அமைச்சர் பேச ஆரம்பித்தார்.

“இந்த விபத்தைப் பார்க்கிறபோது எனக்கு சின்ன வயசில் நடந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது கர்னாடக மாநிலத்தில் பலகாலம் வாழ்ந்த போது நேர்ந்த அனுபவம். நாமெல்லாம் சின்னவயசில் கூட்ஸ் வண்டி என்னும் சரக்கு தொடர்வண்டியின் கடைசிப் பெட்டியில் கொடியுடன் நின்று கொண்டிருக்கும் தொடர்வண்டி காவலருக்கு சிறிய வயதில் டாட்டா காட்டியிருப்போம். தொடர்வண்டியின் பின்னால் மகிழ்வாக அமர்ந்து செல்கிறார்கள். எளிதான பணி இவர்களுடையது என்றுகூட யோசித்திருப்போம்”. ஆனால், அன்றைய காலகட்டத்திலும் சரி, இன்றைய காலகட்டத்திலும் சரி Railway Guard என்று அழைக்கப்படும் பணி அவ்வளவு எளிதானதல்ல.

பள்ளிநாட்களில் வீட்டின் அருகாமையில் உள்ள தொடர்வண்டி நிலையத்தினை கடந்து செல்லும் பொருட்களை ஏற்றிச்செல்லும் தொடர்வண்டிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டேயிருப்பேன்.

அப்போதெல்லாம் பொருட்களை ஏற்றி செல்லும் தொடர்வண்டியின் கடைசிப் பெட்டியில் ஒற்றை ஆளாக நின்றபடியே கொடியை வீசி அசைக்கும் காவலரைப் பார்த்து கையசைப்பது வழக்கம், உலகிலே மிக தனிமையானது கார்டு வேலை என்று தோன்றும், கடைசி பெட்டியில் இந்த கார்டு என்ன தான் செய்வார், அவர் ஏன் வெள்ளை உடை அணிந்திருக்கிறார், தொடர்வண்டி நிலையத்தில் கூட்ஸ் நிற்காத போது நிலைய நடைபாதை பகுதியில் ஒருவர் நின்று கொண்டு வளையம் ஒன்றை வீசி எறிவார்கள், காவலர் அதைச் சரியாக தனது கைகளுக்குள் எப்படி வாங்கி கொள்கிறார் என்று ஆச்சரியமாக இருக்கும். ஒரு நாள் பொருட்களை ஏற்றி செல்லும் தொடர்வண்டியில் அதுவும் காவலர் கூடவே பயணம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். நண்பன் ஒருவனின் அப்பா தொடர்வண்டி தொழிற்சங்கவாதியாக இருக்கவும், எனது ஆசையை அவனது அப்பாவிடம் சொன்ன போது, ‘எனக்கு தெரிந்த ரங்கநாதன்னு ஒரு காவலர் இருக்கார், அவர் கிட்ட கேட்டுப் பாக்குறேன், ஸ்ரீரங்கபட்ணம் வரைக்கும் உன்னை கூட்டிகிட்டு போவார்’ என்றார்.

கூட்ஸ் வண்டி வந்தது ரங்கநாதன் என்ற அந்தகார்டுக்கு அப்போ முப்பத்தி ஐஞ்சு வயசு இருக்கலாம். பத்துவயதாக இருந்த என்னை கையசைத்து ஏறிக் கொள்ளச் சொன்னார், அந்த தொடர்வண்டியில் ஏறி நின்று கொண்டேன், நான் ஆசைப்பட்டது இது தான் என்று மகிழ்வாக இருந்தது. கூட்ஸ் தொடர்வண்டி ஒரு நாள் இரவில் பழுதுபட்டு நின்று போன தனது அனுபவத்தை சொல்லிக் கொண்டே

வந்தார்.

என் கண் முன்னாடியே அவர் கொடியசைத்து தொடர்வண்டி நிலையங்களைக் கடந்து போனார், கண்முன்னே அந்த இரும்பு வளையத்தினை கையில் வாங்கி என்னிடம் தந்தார், அவரது பணி ஒவ்வொரு தொடர்வண்டி நிலையத்தினையும் கூட்ஸ் எத்தனை மணிக்கு கடந்து போனது, எங்கே நின்றது, என்று குறிப்புகளை எழுதுவது என்பதை நேரிலே கண்டு கொண்டேன், கூட்ஸிலிருந்த சரக்குகளை கவனமாக கொண்டு போய்சேர்க்கிற பொறுப்பு அவருடையது என்பதை பற்றி சொல்லிக் கொண்டே வந்தார், எல்லா வேலையும் போல இதுவும் ஒரு வேலை தான், வெயில் காலத்தில பயணம் கஷ்டம் மத்தபடி எனக்குப் பிடிச்ச வேலைப்பா. என்றார். விடைபெறும் போது எனக்கு சாக்லேட் வாங்கிக் கொடுத்தார்.

முன்பெல்லாம் கொள்ளையர்கள் தொல்லை அதிகம். தொடர்வண்டியை கொள்ளை அடிப்பார்கள். கொள்ளையர்களிடம் சண்டையிட்டு பயணிகளைப் பாதுகாக்க வேண்டியது காவலரின் பொறுப்பு. இப்போதெல்லாம் இதுபோன்ற பிரச்னைகள் இல்லை. ஆனாலும், அவர்களின் பணி சுலபமானது கிடையாது. தொடர்வண்டிக்கான கதவை கடப்பது, ஆபத்து சிக்னலைக் கவனிப்பது, தொடர்வண்டி பயணிகளின் பாதுகாப்பு என அனைத்துக்குமே அவர்தான் பொறுப்பு.

கூட்ஸ் வண்டியில் அன்று பயணம் செய்தபின் நான்என் அப்பாவின் பணிகாரணமாக வடக்கே போய்விட்டேன் . கல்லூரி படிப்பு முடித்தபோது ஒருநாள் ஒரு செய்தி பார்த்தேன் அதில் சாம்ராஜ் நகர் - திருப்பதி இடையே சென்ற விரைவு தொடர்வண்டி, மண்டியா மாவட்டம் ஸ்ரீரங்கபட்டணா தொடர்வண்டி நிலையம் அருகே இரும்பு மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்தது. அப்போது, பயணி ஒருவர் அவசியம் இல்லாமல் அபாய சங்கிலியைப் பிடித்து இழுத்ததால் தொடர்வண்டி இரும்பு மேம்பாலத்தின் மேல் நின்றது. உயரமான அபாயகரமான அந்தப் பாலத்தில் தொடர்வண்டி நின்ற நிலையில், அங்கிருந்த மூத்த தொடர்வண்டி பாதுகாவலர் ரங்கநாதன் சற்றும் யோசிக்காமல் குறுகிய பாலத்தில் இறங்கி, தொடர்வண்டி ப்ரேக் அமைப்பை மீண்டும் இயங்க வழிவகை செய்தார். அதுமட்டுமன்றி அபாய சங்கிலியை இழுத்தவரைப் பிடித்து ஆர்.பி.எஃப்ஃபிடம் ஒப்படைத்தார். அப்போது தொடர்வண்டி துறை அமைச்சராக இருந்தவர் பாராட்டு தெரிவித்து. தொடர்வண்டி துறை பொது மேலாளர் அவருக்குச் சான்றிதழ் மற்றும் 5,000 ரூபாய் பரிசு வழங்கினதைப்படித்து பிரமித்தேன்.

நேற்று அவர் மட்டும் தொடர்வண்டியில் இருந்திருந்தால் உடன் விபத்தை தவிர்த்திருப்பார். இப்போது சாம்ராஜ் நகரில் தான் அவர் இருக்கிறாரா

இன்னும் காவலராக பணிபுரிகிறாரா ஓய்வுபெற்று விட்டாரா என விசாரித்து அவரைத் தேடிப் போய் நான் பாராட்ட நினைக்கிறேன்.” என்று நெகிழ்ச்சியான குரலில் முடித்தார்.

“தாத்தா ஈஸ் க்ரேட்” என்றாள் ஸ்ரீநிதி கைகளை படபடவெனத் தட்டியபடி.

கிருஷ்ணன் தொடர்வண்டி துறை அமைச்சரின் செயலாளரின் தொலைப்பேசி இலக்கத்தை தேடினான்.

பிறகு ரங்கநாதனிடம், “அப்பா! அந்த பெயர்ப்பலகை எங்கே?” என்று கேட்டான்.

—

மைதிலி நாராயணன்,
(ஷைலஜா)
A. 208. அனன்யாஸ் நானா நானி ஹோம்ஸ்,
வடவள்ளி, கோயம்புத்தூர் - 41
கைப்பேசி: 9008458256

# ஏது செய்வாயோ?

மாடாய் உழைத்ததார் உன் தந்தை
ஓடாய்த் தேய்ந்தார் உன் அன்னை
பாடாய்ப் பட்டான் உன் தமையன்
கேடாய் ஏன் நீ ஆகினாயோ?

கல்விக் கரை யேற்றிடவே
பொல்லா வறுமை துரத்திடவே
எல்லாச் சுமையும் அவரேற்க
நல்லாய்ச் சமைய மறந்தாயோ?


குற்றச் செயலில் துணையாகி
சுற்றத்தோரை வலியாக்கி
பெற்றோர் ஆசை தவிடுபொடியாக்கி
முட்சொல் வீசிப் போனாயோ?

கண்ணாய் உனைக் காத்தவரின்
பொன்னாய்ப் போற்றி வளர்த்தவரின்
முன்னால் இன்று எடுத்தெறிந்து
புண்ணாய் நோகச் செய்தாயோ?

புரிவாய் ஒரு நாள் உறவுகளை
தெரிவாய் அவர்தம் அருமைகளை
எரியும் அன்று உன் நெஞ்சம்
அறிவாய் ஏது செய்வாயோ?

—

மக்கொனையூராள்.



மா. நிரல்யா,
முதல் வகுப்பு, சிங்கப்பூர்.

# விதியோடு போராடு

காசை வாங்கிக்கொண்டு
கருமம்பல ஆற்றுகிறார்
நாகூசாது பேசிப்பேசி
நாடகமாடிக் கவிழ்க்கின்றார்

அறியாத பேதமையில்
அநியாயவலையில் வீழுகிறார்
அனைத்தும் உண்மையென
நம்பியதில் நலிகின்றார்

கூவிவிற்கும் கோணங்கித்தனம்
வாங்கியபின் வெளுத்துவிடும்
காட்டுமாசை வீதியிலே
காரியமானபின் வீசப்படும்

கெட்டார் நல்லார்போல் நடித்து
கெடுதலைத்தான் நாடிடுவார்
நடிப்பதை அறிந்திடாத அந்த
நல்லவர்தான் என்ன செய்வார்?

பூமியில் புல்லுருவிகள்
புரையோடிக் கிடக்கின்றனவே
பதரென்றும் பதரேதான்
புடைத்துவிடப் பறந்திடுமே

கட்டாயம் உலகினிலே
கண்ணுக்குள் எண்ணெய் விடு
கெடுதல் தரும் நாசகாரரிடம்
கவனமாக இருந்து விடு

ஒருநாள்தனிலே உனக்குள்ளே
உண்மையெலாம் புலப்படும்

ஒருவரும் அந்நேரம்
உதவிடவே வரமாட்டார்

ஆய்ந்தே இறங்கிவிடு
அறிவாய்த் தொடங்கிவிடு
ஆசையில் நீயும் வீழ்ந்து
அழிந்தொழிந்து போய் விடாதே

கவனம் மனிதா
காலம் உணர்த்தும் படிப்பினை
இழந்தபின் அழுவதனால்
இம்மியும் பயனேதுலகில்?

தேனைத் தடவித் தடவி
தேளோன்றூர்ந்து வரும்
சூதானம் உனக்கு வேண்டும்
சூதில் வீழ்ந்து விடாதே

குழியில் தள்ளிவிட்டுக்
கைகொட்டியே சிரிப்பார்
தாமே மேதையென்ற
தப்புக்கணக்கில் நிற்பார்

ஏதிலியாய் நீயும்
ஏமாற்றம் அடையாதே
எதிரிலேதான் எதிரிகள்
எளிதாகக் கண்டுபிடி

இம்மையில் ஏமாளி
மண்கவ்வும் கோமாளி
நீயில்லை அறிவாய்
நூதனமாய் வாழ்வாய்

நீசத்தனம் மிக்கோர்
நேர்மையை விற்றோர்

நீடூழி நிற்காமல்
நிலையழிந்து போயிடுவார்

கண்கட்டி வித்தையெல்லாம்
கனகச்சிதமாய் செய்திடுவார்
காலம் பதில் சொல்லும்
கலங்காதே மனமே

விஷப்பாம்பு படமெடுத்து
வேட்டையாடக் காத்திருக்கும்
வேடிக்கை பார்க்காமல்
விதியோடு போராடு மனமே

## லிமரைக்கூ கவிதைகள்

*1*
விரதத்தில் தண்ணீர் தாகம்
விரைவாகவே அதிகரித்துச் செல்லும்
முடிந்தபின் உண்ணும் வேகம்

*2*
மகளிர்தினப் பேச்சு
மேடையில் முழங்கும் கனவான்
வீட்டிலே மனைவிக்கு ஏச்சு

*3*
தலையின் முடி கொட்டி
வயதாகிட வயதாகிட மனிதனின்
வயிறு ஆனது சட்டி

*4*
எடுப்பார் கைப்பிள்ளையாய் உன்னை
எடுத்தெதெற்கெல்லாம் உபயோகித்த
பின்னே
வார்ப்பார் புழுதி மண்ணை

*5*
வாயைத் திறக்கும் புலி
மிகவும் பயங்கரமாக இருக்கிறது
மனதில் ஏற்படும் கிலி

*6*
தாயின் உடம்பில் முட்டி
ஓடி விளையாட எத்தனிக்கும்
நடைபயிலும் யானைக்குட்டி

*7*
காதல் எனும் கள்
உள்ளம் கவர்ந்து காலம் செல்ல
ஆகிறது வலிதரும் முள்

*8*
சாதிகளின் கலப்பு
மேடையில் விரும்பிப் பேசும்
பெரியார்வாதி
வீட்டில் மகளோடு எதிர்ப்பு

*9*
உணவு தேடும் பருந்து
தரையிறங்கிச் சண்டையிட்டு வெல்ல
கடைசியில் பாம்பு விருந்து

*10*
அடர்ந்து தெரியும் வனம்
ஒவ்வொரு பசுமை மரமாய் சேர்ந்து
பறவைகள் இசைத்திடும் கானம்

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

# எப்போது தீரும்

தூரங்களை தாண்டி
துயரங்களை பின்னி
ஓரங்களில் சுமந்து
தாகங்களில் நீந்தும்
மனதிற்குள்
எத்தனை பசி வேட்கைகள்

பிஞ்சுகளாய் உடையும்
மென்மையான மனதில்
உண்மையாய் உரசும்
உசுருக்குள் நெருப்பை
வாரி இறைத்தலால்
பசியாற்றும் இடம்
நிறைவுக்குள்ளானதா?

கிளைகளை உடைத்து
இலைகள் உதிர்ந்து
நிர்கதியாய் நிற்கும்
மரத்தில் கூடுகள்
தங்களின் வாழ்நாளை
எண்ணத்தான் செய்கின்றன?

மேகங்கள் சூழ்ந்து
மழைகளை இறைத்து
காலியாக்கிய ஊர்களுக்குள்
சம்மனமிட்டு எக்கலித்து
இறுமாப்புடன் அமர்ந்து
உருண்டோடும் வெள்ளங்களாய்
மனைசூழ்ந்து கிரகப்பிரவேசம்
கொள்கின்றன

மனங்களில் சூழும்
மாய சண்டைக்குள்
இனமறியா பயங்களோடு
கத்தியின்றி சூழும்
வார்த்தைகளுக்குள்
அத்தனை பேரையும்
கட்டி இழுக்கின்றன
களமிறங்கி போரிடுகின்றன

வேட்கைகளில்
ஒளிந்திருக்கும்
மாயப்பின்னலை
விரித்திட்டால் பின்னலின்றி
வலைவீசி பிடிக்கும்
மீன்களெல்லாம்
குதித்து குதித்து
தன்வாழ்நாட்களை
குதூகலித்து கொண்டாடும்

நீராடும் அலைகளாய்
போராடும் கரைகளில்
நுரை சிந்தி நுரைசிந்தி
மென்மையாய் நகர்கிறது
உண்மையாய் நிற்கிறது

காலங்களில் வரும்
நேரங்களெல்லாம்
நம் நேரங்களை தீர்மானித்து
சுற்றறிக்கை தருகின்றன

சுயங்களில் நின்று
வரங்களாய் வருதலால்
நிறங்களும் ஒளிர்ந்து
மனமேற்று மகிழ்கிறது

மனமிட்ட கேள்வியில்
பதில்களை நிரப்புங்கள்
கணங்களற்று முளைத்திடும்
சுவாசங்களின் பின்னணியில்
சுவாசிக்கும் காற்றாய்

நின்றிடுங்கள்
தீர்வுகள் முளைத்தெழும்

## தலையில் பாரங்கள்

முந்திச்செல்கிறது
வயிற்றுப்பசி

கொட்டிய கனமழையில்
விரித்துச் செல்கிறது
நனையும் குடை

ஆற்றில் மக்கள் வெள்ளம்
பயந்தோடும் மீன்கள்
மீன்பிடி திருவிழா

பசிக்கு இசை
விலைபேசப்படுகிறது
புல்லாங்குழல் விற்பவனிடம்

காவலுக்கு செல்கிறான்
அறுவடை வரை மட்டும்
சோளக்காட்டு பொம்மை

இறங்கிய கனமழை
இரங்கற்பா பாடுகிறது
இறந்த பயிருக்கு....

பற்றாமல் எறிகிறது
ஏழையின் அடிவயிறு
விலைவாசி

பூக்கடையும்
பூத்து குலுங்குகிறது
பூக்காரியின் பிரசவம்

இடம்தேடும் யாசகன்
திருடப்பட்ட நிழல்
மரவெட்டி

யாசகன் விரித்த துண்டில்
கூவி அழைக்கும் பசி
வெறுமனே கிடக்கிறது துண்டு

—

ஞா. முனிராஜ்

## நான் அங்கில்லை.

நீ இங்கில்லை.

ஆனாலும் நாம்
இருக்கிறோம்

தொலைவுகளினால்
தொலைந்து போகாமல்
இருக்கிறது

கதியற்று அலைந்து
நம்மிடம் சரணாகதி
அடைந்து விட்ட
காதல்

— அ. ஈடித் ரேனா,
கிராம நிர்வாக அலுவலர்,
புதுக்கோட்டை - 622003



# வான மழையனின் கனவு

அது கனவென்று பிடிபட வெகு நேரம் பிடித்தது.

கனவுக்குள் கனவு என்று நம்புவதற்குள் விடிந்தும் விட்டது. விடிந்து விட்டதா தூக்கம் களைந்து விட்டதா என்று உறுதி செய்து கொள்ள விருப்பம் இல்லாத மன நிலையை முகமூடி போட்டுக்கொண்டு பின் தொடர்ந்த நிலையைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சொல்வதெல்லாம் சொல்லி விட்டேனா என்று புரிபட நான் விரும்பவில்லை. ஆனாலும்.. அது கொண்ட விருப்பத்தின் நகலை அப்படியே அசல் ஆக்க முயற்சிக்கிறேன்.

அவரே தான் வந்திருப்பது.

வீடே ஸ்தம்பித்து பார்த்துக் கொண்டிருந்தது. நானும் தான். எல்லோருக்கும் இருக்கும் அச்சம் எனக்கும் இருந்தது. எனக்கிருந்த ஆர்வம் எல்லோருக்கும் இருந்தது.

"வானா... வாடா..." என்றாரே. தூக்கி வாரி போட்டது. இது அவர் குரல் இல்லை. குறுகுறுவென பார்த்தேன். கண்களில் அவர் தான் தெரிந்தார். ஐயோ என்ன இது... இப்படியெல்லாம் நடக்குமா. கனவுக்குள் நடக்கும் நிஜத்தை எப்படி அணுகுவது என்று நினைவுக்கு வரவில்லை. புரண்டு படுக்காத கவனம் மட்டும் ஆழமாய் மூச்சிழுக்க செய்தது.

ஒரு கூட்டம் அழுது ஆர்ப்பரித்தது. ஒரு கூட்டம் அதிசயித்து அருகே செல்லாமல் எச்சரிக்கையோடு கதவொட்டி நின்று கொண்டிருந்தது. வெச்ச கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே.. நேசன் மாதிரி தான் இருக்கு... என முனகிய வாய்க்கு இன்னொரு காது ரகசியமாய் பதிலளித்தது.

"நேசனே தான். சின்ன வயசுல தாடைல மாடு முட்டின தழும்பு அப்பிடியே இருக்கு பாருங்க."

நானும் கூட கனவை விலக்கிக் கொண்டு கவனித்தேன். ஆம் மாடு முட்டின தழும்பு. மாயம் முத்தின உருவம் போல பார்த்தார். கண்களைத் தாழ்த்திக் கொண்டேன்.

இந்த கனவு இது முதல் முறை அல்ல. அவ்வப்போது வருவது தான். எங்கிருந்தும் தொடங்கி விடும் கனவில் எங்கிருந்தும் இணைந்து கொள்ளவும் வாய்த்த காட்சி கோர்வைகள் தான் இதில் பிரத்யேகம். தொடர்ந்து வராவிட்டாலும்... அவ்வப்போது வருவதில் ஒரு தொடர்ச்சி இருக்கும். இடது காலை ஒருக்களித்துக் கொண்டு சோபாவில் சாய்ந்து அமர்ந்து ஒரு மோனலிசா புன்னகையை காட்டும் அந்த காட்சி தான் கனவின் மையமாக இருக்கும். சில போது வலது காலோ என்று கூட சந்தேகம் கூட்டும் மையத்தின் உதிரிப் பிழை.

அவர் தான் அது. ஆனால் ஏன் குரல் வேறு மாதிரி இருக்கிறது.

ஐயையோ... எழுந்து நின்ற போது நெஞ்சுக்குள் மின்னல் வெட்டியது போல இருந்தது. அவர் அவரை விட உயரமாக இருந்தார். எப்படி இத்தனை வயதுக்குப் பின் வளர்ச்சி. கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் ஆகி விட்டனவே. ஒன்றும் புரிபடவில்லை. உடலின் எடை அப்படியே தான் இருப்பதாக தெரிகிறது. உயரமும் குரலும் தான் வித்தியாசம். முடி கூட அதே சுருட்டை முடி தான். மீசையின் அடர்த்தியில் மாற்றம் இல்லை. வெள்ளை முடிகள் சில மினுங்கியது பெரிதாக உறுத்தவில்லை.

"இல்லப்பா இது அவன் இல்ல. அது எப்பிடிப்பா நடக்கும். உங்க ஏசு சாமி கல்லறைலருந்து எந்திரிச்சு போன மாதிரியா. அவர் சாமி. நடக்கும். இவனுக்கு எப்பிடி...?"

"அட பொதைச்சு கடைசி மண்ணை மேல போட்டதே நான் தான. திரும்பவும் உயிர் வந்து மண்ணை பொளந்துக்கிட்டு மேலே வந்துருந்தாலும்... அன்னைக்கே இல்ல வீட்டுக்கு வந்திருக்கணும். பத்து வருசத்துக்கு அப்புறமா வர்றானா.. இத்தனை வருஷம் எங்க போனானாம்....!"

துருவி துருவி கேட்டு பார்த்தார்கள். சிரிப்பு தான் பதில். மிரட்டி விட்டு பயந்த கூட்டத்தில் பலர் கழன்று கொண்டார்கள். மர்ம புன்னகையில் கொஞ்சம் கோபமும் கலந்த மாதிரி ஒரு முக பாவனை வந்து போனது.

"என்ன கேட்டாலும் சிரிச்சே மழுப்பறான். அன்னைக்கு செத்தது அவனே இல்லன்னு அதிசயப்பிறவி ரஜினி மாதிரி கதை விடறான். இத்தனை நாள் ஒரிசாவுல இருந்தேன்னு சொல்றான்..."

"அதெப்படி ஊட்டில செத்த ஒருத்தன் பத்து வருசமா ஒரிசால இருக்க முடியும்...?!"

தலையை சுழற்றி பார்த்தது வீடும் ஊரும். தாகமே அடிக்காதவன் போல பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

விஷயம் கேள்விப்பட்டு வந்து கொண்டே இருக்கும் சொந்தபந்தங்கள் கூடி கட்டிக்கொண்டு ஒப்பாரி ஒரு பக்கம். ஆனாலும்.. பதற்றத்தில் பார்வையை அவன் மீது கொள்ளாமல் சற்று தள்ளியே கொண்ட நிலையும் ஒரு பக்கம். அதே இடுங்கிய கண்கள். அதே மர்ம புன்னகை. அவனே தான். நண்பன் சான்றிதழ் கொடுத்தான். அவன் மேல ஒரு வாசம் அடிக்கும். அதே வாசம் தான் இவன் மேலயும் அடிக்குது. மனுசனுக்கு மனுஷன் வேற வாசம் என்பது நியாயம் தான். நம்பலாம்.

இறந்தவன் திரும்பி வருவதில் இருக்கும் நம்பிக்கை தொங்கு பாலத்தில் பதியும் கால்களின் நடுக்கம் போன்றது. உள்ளே இனம் புரியாத கிடுகிடுப்பும்.. வெளியே உள்ளம் பூரித்த படபடப்பும். ஆனாலும்... சிறு இன்பம் தலையில் வட்டமிடும். பெரும் கேள்வி காதுக்குள்

முட்டையிடும்.

பிள்ளைகள் வளர்ந்திருந்தார்கள். அருகே வர தயங்கினாலும்... அப்பாடா என்ற பெருமூச்சு அவர்களை சூழ்ந்து திகைத்தபடியே இருந்தது. மனைவி முதலில் தடுமாறினாலும்.. பிறகு அவர் தான் என்றாள். வலது தாடையில் இருக்கும் மச்சத்தைக் காட்டி நம்பினாள். நம்பவே முடியாததை நம்ப முடியாமலே இருக்க முடியாது. நம்பலாம் என்று ஒரு சிறு பொறி புகைந்து கொண்டே இருக்கும். கும்மிருட்டுக்கு ஆறுதல் அது.

பூசாரிகள் வந்து நோட்டம் விட்டார்கள். பாஸ்டர்கள் வந்து பவுடர் பூசினார்கள். ஒண்ணும் வேலை ஆகவில்லை.

அது பேயோ பிசாசோ இல்லை. ரத்தமும் சதையுமான பிண்டம். நான் இந்த கனவில் எங்கிருக்கிறேன் என்று தேட தேடவே என் பார்வை அவர் மீது தான் குவிந்திருந்தது. என் கனவுக்குள் நிகழும் எல்லாமும் என் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற கவனம் என்னை அவரையே கண் காணிக்க செய்து கொண்டிருந்தது. மூச்சிரைக்க முகம் இனிக்க அவர் அமர்ந்திருக்கிறார். அட உட்காருவது கூட அவர் மாதிரி தான். நானும் கூட நம்ப தான் வேண்டும் போல. பல மாயங்கள் நிறைந்த உலகம் தானே இது. நடக்காத விஷயங்கள் நடந்து விடும் தருணங்களை கொண்டிருக்கும் காலம் தானே பூமியில் இருக்கிறது. பிரபஞ்சமே அதிசயம் தானே. அதில் ஒன்று இது என்று நினைக்கையில் மனதுக்குள் இன்ப வெள்ளம் அசைந்தாடியது. பத்து வருடங்களில் அவரின் வெற்றிடம் எத்தனை கனமானது. எத்தனை புலம்பி இருக்கிறேன். அவர் திரும்ப வந்ததில் மகிழ்வு தான். ஆனாலும் எப்படி என்ற மானுட இச்சை ஆழம் அறிய அரிக்கிறது.

முப்பத்தைந்து வயதில் அவர் மரித்த போது இந்த வீட்டின் தகவமைப்பே மாறி விட்டது. யாரும் யார் மீதும் இணைப்பு இல்லாத மாதிரி ஒரு வெறுப்பை சுமக்கும் முகத்தை மாட்டிக் கொண்டு அலைந்த அந்த நாட்களை அவரிடம் ஒவ்வொன்றாக சொல்ல வேண்டும். ஆனால்... அது பற்றிய எந்த பதற்றமும் இல்லாமல்... வீட்டுக்கு வந்த விருந்தாளி போல அமர்ந்திருக்கிறார். மரணத்தை நேசித்தவர் போலவும் இல்லை. உயிர்த்தெழுதலை விரும்பியவர் போலவும் இல்லை. காலத்தின் நகர்தலை உணர்ந்தவர் போலவும் இல்லை. உள்ளத்தின் தீவிரத்தை திறந்தவர் போலவும் இல்லை. எல்லாருக்கும் அதே பார்வை. யாவருக்கும் அதே புன்னகை. பேசினால் தான் கனவு அதிர்கிறது.

"அடே நேசா... இங்க உன் குடும்பம் தவியா தவிச்சிட்டிருக்கு. நீ பாட்டுக்கு ஒரிஸால இருக்கேன்னு சொல்ற. ஏன் இங்க வரணும்னு தோணல. அங்க என்னடா பண்ணிட்டுருந்த. பத்து வருசத்துக்கு அப்பறம் ஏண்டா வந்த...?" ஒரு பெருசு ஆழம் பார்த்தது.

“பெரிப்பா... எனக்கு வழி மறந்து போச்சு. யோசிச்சு யோசிச்சு... இப்ப

தான் ஊர் பேரயே கண்டு பிடிச்சேன். அப்புறம் ஒரு முறை வந்தேன். ஆனா இங்க யாருமே இல்ல."

"என்னடா உளர்றான்...!"

கனவில் உளறல் சகஜம். உள்ளத்தின் உள்ளபடி திறந்து கொண்டே இருக்கும் கதவுகளைக் கொண்டது. மூடிக்கொண்டே இருக்கும் நாட்களின் நிறத்தில் வானம் பூமியில் விரி பட்டிருக்கும். நேரத்தை நிறுத்தி நிறுத்தி காணும் பூதக்கண்ணாடி கனவுக்குள் உண்டு தானே. உண்டவன் வயிற்றில் ஏறி விளையாடும் ஓராயிரம் பிச்சை கைகள் உணரலாம் தானே. நான் கண்களை அழுந்த தேய்த்துக் கொண்டு இந்த கனவு எப்போது முடியும் என்று யோசித்தேன். முடிந்து விட கூடாது என்றும் யாசித்தேன். இது கனவு தானா என்றும் மூச்சிழுத்தேன்.

அவர் மட்டும் வீட்டில் தனியாக இருக்கும் சூழலில் என்னால் அந்த வீட்டுக்குள் செல்லவே முடியவில்லை. பயம் தான். கூடவே ஆராய்ச்சியும். இங்க செத்தவன் அங்க எப்படி பொழைக்க முடியும்.

"என்ன.... வான மழையா...! பயப்படாத என்றாரே... அதுவே மிகப்பெரிய பயமுறுத்தல் தான். அவர் உடலில் எவர் குரலோ எனும் போது முதுகில் சத்தென்று அடித்து விட்டு ஓடிய இருள் போல திக்கென ஒரு துள்ளல் மண்டைக்குள். இதயம் நடுங்க... அவருக்காக காத்திருந்த காலங்கள் எல்லாம் மரண வீட்டு பூக்கள் போல உதிர்ந்தன. மரித்தவரை விட்டு விட வேண்டுமோ. காதுக்குள் கேட்கும் ரீங்காரம்... அவரின் பழைய குரலை மீட்டெடுக்க படாத பாடு பட்டது.

தைரியத்தை வரவைத்துக் கொண்டு... "நிஜமா நீ தானா... இல்ல இதெல்லாம் தெரிஞ்சுக்கிட்ட வேற யாரோவா..."

"அட நம்ம ஆத்தா சத்தியமா நான் தான்."

அதே பல்லவி தான்... இந்த முறை ஆத்தாவை துணைக்கழைத்துக் கொண்டிருந்தது.

அவர் திரும்பி வந்து விட மாட்டாரா என்று எத்தனையோ நாள் ஏங்கி இருக்கிறேன். அவர் மரணம் பொய்யாக இருக்க கூடாதா என்று தவித்திருக்கிறேன். இதோ திரும்பி வந்து விட்டார். ஆனால் சந்தோஷம் இல்லை. சந்தேகம் தான். அறிவியல் நண்பன் மனோதத்துவம்... மறுபிறவி.. என்றெல்லாம் பேசினான். மறுபிறவி என்றாலும்... அவர் இறந்த பிறகு தானே பிறந்திருக்க முடியும். அப்படி என்றால் இப்போது 10 வயது தானே ஆக முடியும். 45 வயதில் எப்படி வந்து நிற்க முடியும். செத்தவனுக்கும் வயசாகுமா. முதல்ல செத்தவன் எப்படி உயிரோட வர முடியும். அப்ப பத்து வருசத்துக்கு முன்னால எங்க கண்ணு பட செத்தது வேற யாரோவா.

என் கனவு தானே. இன்னும் கொஞ்சம்

நெருங்கி கவனித்தேன். டைட் க்ளோஸ்க்கு சென்றது கனவிலி.

"அவர் திரும்ப உயிரோட வந்தரனும்ங்கற உன்னோட ஆசை... ஆவல் இயலாமை எல்லாம் தான் இப்பிடி கனவுல அவர கொண்டு வந்து நிறுத்திருக்கு. கனவுங்கறதுனால அவரோட குரல்ல பழைய டெசிபல உணர முடியல. இதே கனவு அடிக்கடி நிறைய முறை வர்றதுக்கு உன் ஆழ் மனசு ஆசை தான் காரணம். அவர் இறந்ததை நீ ஏத்துக்க தயாரா இல்ல. அதனால வந்த காட்சி பிழை தான் இதெல்லாம். அவரை மரணத்துல இருந்து உயிர்ப்பிக்கனும்ங்கற உன்னோட பேராசை தான் இதோட அடித்தளம். உயிர்த்தெழுதல் மேல உன்னையறியாம உனக்கிருக்கற நம்பிக்கை தான் இது. லூசிட் ட்ரீம் உனக்கு உதவி பண்ணிருக்கு."

நான் கண் விழித்த போது கண்கள் கலங்கி இருந்தேன். சந்தேகம் இருந்தாலும்... அதனோடே ஒரு உருவமில்லாத சந்தோஷமும் இருந்தது. இப்போது இந்த கனவை முடித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. மீண்டும் கனவுக்கு காத்திருக்க ஆரம்பித்தேன்.

அதே சமயம்... அவர் சொன்ன முகவரியைக் கொண்டு ஒரிசா சென்று விசாரித்த போது...

"ஆமா.. நேசன்.. இங்க தான் லாரி டிரைவராக இருக்கான். இருக்கும்.. ஒரு பத்து வருஷம் இருக்கும்.. இங்க வந்து. ஊரு கூட தமிழ் நாட்டுல ஊட்டி பக்கம் எங்கயோ சொன்னான்... இப்போ கூட ஊருக்கு போறேன்னு தான் போயிருக்கான்."

சொல்லிக் கொண்டிருப்பவரின் குரலில் அதிர்வு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

எனக்கு அதெல்லாம் பெரிதாக தெரியவில்லை. இதோ இப்போது நான் கேட்டு கொண்டிருப்பதும்... பார்த்துக் கொண்டிருப்பதும் கனவா நிஜமா என்பது தான் தெரிய வேண்டும்.

— கவிஜி

# குறுங்கவிதை

நிலவொளியில் கடற்கரை
சிறுமி கட்டிய மணல்வீட்டில்
ஓடு கழற்றும் நண்டு

ஆற்றிலோடும் மழைநீர்
உறிஞ்சு வாழும் கரையோரமரங்கள்
மௌனம்... மௌனம்...

ஏழைமாணவன் வீட்டில்
கூடு கட்டும் தாய்க்குருவி
நீட்தேர்வில் தேர்ச்சி...!

—



ஸ்ரீவி. முத்துவேல்,
துபாய்.

# தோழர் நல்லகண்ணு

சமூகத்தை
சமப்படுத்த
திருநெல்வேலியிலிருந்து
கிளம்பியது
ஓர் அரிவாள்

இந்த அரிவாள்
பிறரின் ரத்தத்தை
சூடியதல்ல
தனது
ரத்தத்தையே சூடியது
பிறருக்காக

ஜனசக்தி இதழில்
ஒரு ஜனத்தின்
சக்தியைக் காட்டியது
இவரது கட்டுரை

பதுக்கிய
நெல் மூட்டைகள்
வெடித்து
வீதிக்கு வந்தது
இவரின்
எழுத்து குண்டுகளால்

வயல்கள்
பச்சை ஆடை அணிய
சிகப்பை சூடிய
கருப்பு இவர்

எளிமையை
புறத்திலும்
வலிமையை
அகத்திலும் கொண்ட
இக்கருப்பு
மனதில் கொண்டது
வெண்மையை

பயிருக்கு
கிடைமட்டமாகவும்
உரிமைக்கு
செங்குத்தாகவும்
நிற்கும்
இந்த அரிவாள்

அண்ணாந்து பார்க்கும்
தலைவர்களுக்கு மத்தியில்
அருகிலிருந்து பார்க்கும்
தலைவர் இவர்

இவரது
போராட்ட வரலாற்றைக்
கூறும்
சிறைச்சாலை
எங்களுக்கு
பாடசாலை ஆகிறது

முதுமையால்
குரல்
ஒடுங்கிப் போனாலும்
தீண்டாமைக்கெதிராக
உயர்ந்து ஒலிக்கிறது
இவரது குரல்

கோடி கிடைத்தாலும்
கொடை கொடுக்கும்...
இலட்சம் கொடுத்தாலும்
இலட்சியத்தை மட்டுமே
தொடும்
இவரது உள்ளங்கை

சிறையிலிருந்து
நாட்டின்
விடுதலை செய்தியைக்
கேட்டவர்...
விடுதலையாகியும்
போராடுகிறார்
சமூகச் சிறைகளை
தகர்த்தெறிய

# துளிப்பாக்கள்

வானத்தை சிறுசிறு துண்டுகளாக்கி
கோப்பையின் மேல் போட்டேன்
இனி தேநீர் அருந்த வேண்டும்

வாசனையை அள்ளும் தென்றல்
புத்தனைப் போலிருக்கிறது
பூக்கள் பூத்த மரம்

சுத்தப்படுத்திய இலைகள்
சருகுகளாகி உதிர்ந்து விட்டன
தட்டி எழுப்புகிறது காற்று

மத வெறியர்களின் விவாதம்
கொல்லப்படுகின்றனர்
கடவுள்கள்

மொட்டைப் பனை
தீக்குச்சியாக எரிகிறது
உச்சியில் சூரியன்

நந்தியின் காதுகளைத் தாண்டி
செல்லும் எறும்புக் கூட்டம்
வாயில் இனிப்பு

வான் எல்லை நோக்கி
பயணிக்கிறது படகு
கூட வானமும் பயணிக்கிறது

அலங்கரிக்க மறுக்கும் குழந்தை
இனிப்பைத் தரும் அம்மா
உதட்டில் வழிகிறது சிவப்பு

குழந்தைகளற்ற பூங்கா
எங்கும் நிலவுகிறது
மயான அமைதி

நான் நனையாதிருக்க
பூ மழையில் நனைய
குடையை விரிக்கிறோம்

தேய் வளர் பிறைகளில்லை
நிலவுக்கு மகிழ்ச்சி தான்
குழந்தைகளின் ஓவியம்

வானம் கொட்டிய நட்சத்திரங்கள்
கோர்த்து விட்டது முள்
மழை

தலைவர் தான்
கால்களாலேயே மிதிபடுகிறது
நிழல்

ஆணி அறையப்பட்டு
மாட்டப்படுகிறது
சுவற்றில் சிலுவை

—



சா. கா. பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம், செங்கல்பட்டு - 603002
கைப்பேசி: 9944315732

# விழுவதற்குள் எத்தனை கரங்கள்

யாராலும்
புரிந்துகொள்ள இயலாத
இயற்கை உபாதயை திணித்து
வீதியோரம் ஒதுங்கும்
பெண்ணென புறம் தள்ளிய எனக்கு
முன்னோ பின்னோ
யார் நின்றாலென்ன

எனது புஜங்களையுரசி
சூடு தனிய விரும்பும்
ஊண்உண்ணிகளின் கண்களில்
குண்டூசிகளின் பிறப்புறுப்பினை
யார் விதைத்தது

இடைவலியை அறியாது
அமர்ந்தவளிடம்
கனிகளின் காம வண்ணங்களையெண்ணி
கரங்களில் எடுத்து மிதமிஞ்சும்
மாமிச ஆறறிவுகளின் கரங்களில்
இச்சையின் விரல்களை முளைக்கச்
செய்ததார்...

எங்கு சென்றாலும்
எனது புட்டகம் பதித்த இருக்கைகளில்
யார் அமர்ந்தாலும்
எழும் சூட்டினை நுகர்ந்து
வெப்பத்தின் விளக்கத்தை
அறிந்து எழுவர்
நான் எத்தனை வெப்பச் சலன நரனென்று

ஒவ்வொரு துளியினையும் தொடைக்குள்
மறைத்து நடைபோடும்
பெண்ணெனும் புள்ளிகளின் தூவலில்
மிளிர்ந்த சதைப்பற்றுகள் விழுவதற்குள்
எத்தனை கரங்கள் இச்சையில்...

## நீர்பற்களுடன் ஒரு தாமி

ஒரு பரவளையத்துடன்
நிறைந்ததோர் துளிகளுக்கு
விழுந்த தடம்
புள்ளியாகி புன்னகைப்பதுடன்
பற்களையகற்றி தீர்க்கிறது
தாமிதாகம்...

சோவெனும் மழையினை குடித்து
சொட்டிவிழும் துளிகளுத்தான்
வேர்கள் முளைத்த தாமியொன்று
ஆற்றினை இழுத்து பரவிச் செல்கிறது

பச்சையம் நிறைந்ததோர்
இலையின் வேரினூடே பரவிய
நீர்த்துளிகளுக்கெல்லாம் பசியின்
தாமிகள்

கூர்கொண்ட
பழுப்படைந்த
கடைவாய் பற்களையுடையதோர்
புகைப்படத்தில் படர்கிறது
நீர்பற்களை புன்னகைக்கும் தாமிகள்

இதழுக்கு ஒரு சொட்டும்
இடைமுழுதும் பலசொட்டும்
விதையிட்டு தயங்கி பொழிந்திடும்
மழைதாமிகளின் கரங்களுக்கு
விரலும் ஒரே வண்ணத்தில் கீரிட
இயலாத கூறியபற்கள்...

புன்னகைத்துக் கொண்டே

விழுத்தெழுகிறது நொடிக்கு நொடி
நீர்பற்களுடன் ஒரு தாமி..

## கடைசி பக்கத்தை நிரப்பாத கவிதையொன்று...

நீண்ட சாலைகளை
போர்த்திய வெயிலுக்கு
மழையில்லையென வருத்தம்
பிரித்து வைப்பது மட்டுமா
காலத்தின் வேளை
இடறி விழுந்த வயோதிகனின்
வலி சாலையைத் தொடும்வரை...

ஓடையில் இடறி விழுந்த
கனியின் கணத்திற்கு
ஒரு ஆலோசனையை
வழங்கியது
முகத்தில் தெளித்த நீர்த்துளியொன்று...

நிலத்தினைப் பிடித்து வேரும்
வேரினைப் பிடித்து மரமும்
அமரும் பொழுது
இதயங்களை பிடித்து
பதியப்படுகிறது
அவளது அவனது பெயர்கள்....

ஒருவேளை
அது நடந்திருந்தால்
நிச்சயம் குழம்பம் நிகழ்ந்திருக்காது
இருண்ட இரவில்
ஒரு கல் வடிவ விட்டில் போல்...

முழுப்பக்கத்தையும்
நிரப்பிவிட்ட வெறுமைக்கு
ஒரு புள்ளிக்கூட
கவிதையாகிவிடுகிறது
இருப்பினும்
மிஞ்சிய வெறுமைகளே
வரிகளாய் மாறுகிறது
கடைசிப்பக்கத்தை நிரப்பிடாத
கவிதைகளொன்றாய்....

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



## உன்வீட்டு கூரையில் ஒழுகும்

மழைநீராகவே இருக்க விரும்புகிறேன்
அப்போதாவது உன் சின்ன கைகளுக்குள்
விழுந்து விழுந்து எழுவேன்
நீ சிந்தும் சிரிப்பை ரசித்தபடியே
நான் வீழ்வேன் உனது காலடியில் ..!

நிலம்போலே மனமும் ஈரசுகம்
காணுமே...!

—

ச. ச. இராஜ்குமார்.

# உறவுகள்....!

வார்த்தை அறிந்து
பேசுங்கள்....!
இல்லையேல்....?
அமைதியாக
இருங்கள். ....
உறவுகள் ஒட்டும்...!?

தன் சுய நலம் கருதி
தானாய் வந்து பேசும்...
உறவுகளை விட.....!
உன் துன்பம் கண்டு
கண்ணீர் சிந்தும்...
உறவுகளை நேசி..!

மதியாதார் உறவுகளை...!
மதியிழந்து நாடாமல்..
கொண்டாடும் உறவுகளை...!
கவனமாய் கட்டிக்கொள்....!

தேவை தீரும் வரை மட்டும்...
உறவு போற்றும்....?
பச்சோந்தி உறவு கண்டு...!
பயமின்றி விலகிடுங்கள்....
பாலுக்கும்,நீருக்கும்...
வேறுபாடு அறிந்திடுங்கள்...!

சிரித்து சிரித்து பேசி...
உன் வாழ்வில் குழிபறிக்கும்...!
நரியின உறவினை...!
நன்கு அறிந்திட்டால்...
நாளைய வாழக்கை நலமாகும்...

உறவுகள் என்னும் நெருப்பு...!
சிலநேரம் பூசையில் எரியும்..!
சிலநேரம் வீட்டுக் கூரையில்
எரியும்....!



எது தவிர்க்கப்பட
வேண்டும்
என்றுணர்ந்தால்...?

உண்மையான உறவுகள்
எப்போதும்
உன்னைச் சூழும்...!?

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# காலம் வலியது

மறைக்கப்பட்டவையும்;
மறுக்கப்பட்டவையும்
காலச்சுவடுகளில் எத்தனை
எத்தனையோ ஒளிந்தே கிடக்கிறது.

நிச்சயமாக காலமே அதனை
தெளிவுபடுத்தும். காலம் மிகவும்
வலியது தானே!

—

சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.



# கவிதை என்பது

கவிதை என்பது
தீயை மிதித்துக் கொண்டே
மழையில் நனைவது
முட்களுக் கிடையில்
பூக்களைப் பறிப்பது
பனித் துளிகளை
ஊசியில் கோர்ப்பது

கவிதை என்பது
சிறகு முளைத்த
ஓவியம் போன்றது
பனிக் காற்றோடு
தேனீர் பருகுவது
இசையை இரசித்துக்கொண்டே
மௌனத்தைக் கையாள்வது

கவிதை என்பது
மேகத்தை தழுவும்
காற்றைப் போன்றது
அலைக்கடல் சாரலின்
ஈரம் உணர்வது
வலிகளோடு
வலி நிவாரணம் பெருவது

கவிதை என்பது
சுமையோடு
சுகம் காண்பது
கருவில் சுமக்கும்
குழந்தையைப் போன்றது
மனதை இளகுவாக்கும்
மந்திரச் சொற்களால் ஆனது

கவிதை என்பது
மொழியின் உச்சம் தொட்டு
கவிதையாவது...
உணர்வின் உச்சம் தொட்டு
கவிதையாவது...
இலக்கியத்தின் உச்சம் தொட்டு
கவிதையாவது...

—

பெ.விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001



# நேற்று நம்மோடிருந்தவர்கள்

இன்று இல்லையென
அறிந்தும் எவ்வித சலனமுமில்லாமல்
கடந்துபோகின்றவனிடம் கேட்க
எத்தனையோ கேள்விகள்
எழுகின்றன...
அவன் மனம்
ஊமையாகிவிட்டதென்பதை
அறியும் வரை!

—

மு. முபாரக்,
திருச்சி



# காரைக்காலம்மையார் – ஆண்டாள் பாடல்களில் இராவணத் தொன்மையும் பதிவுகளும்



## முன்னுரை:

தொன்று தொட்டு வளர்ந்து வரும் பக்தி இயக்க மரபில் சைவ, வைணவ சமயங்களில் பெண் அடியவர்கள் பலர் உள்ளனர். தெய்வ பக்திப் பாடல்களைப் பாடியோர் இருவர். ஒருவர் காரைக்காலம்மையார் மற்றொருவர் ஆண்டாள். பண்பாட்டுப் படைப்பு வெளியில் தனக்கெனத் தனியிடம் பெற்றவர்களாக இருவரும் விளங்கினர். சமூகம், பண்பாடு, வாழ்வியல் நடைமுறை என்பவை பின்னர் அச்சமயத்தைத் தொடர்ந்து வந்தவர்களால் வகைப்படுத்தப்பட்டிருப்பினும் அடியார்களுள் எவ்வித பேதமும் கிடையாது. இறைவனே அனைத்திற்குமான மூலம் என்ற கருத்தியலைக் கையாண்டுள்ளனர்.

சைவ மரபினர் சிவனையும், வைணவ மரபினர் திருமாலையும் முழுமுதல் தெய்வமாகப் போற்றினர். சிவானியம், மாலியம் என்ற இருபெறும் பத்தி (பக்தி) இலக்கியக் கூறுகள் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றில் நுண்மையாய் பதிவு செய்யபட்டிருப்பதைக் காணவியலும்.

இந்திய இதிகாசத் தொன்மை மரபில் இராமாயண மகாபாரதக் கருத்தாடலும், கதையாடலும் மக்கள் எல்லாருக்குள்ளும் வேரூன்றி நிற்பதைக்  காணலாம். வாய்மொழிக் கதைகளாக இருந்து பின்னர் அச்சேறிய இவ்விதிகாசங்களில் இராமாயணம் உலக நாடுகள் முழுக்கப் பரவியுள்ளது. இதிகாசங்களில் மகாபாரதம் மிகப்பெரியதாயினும் அவை இந்திய ஒன்றிய எல்லைக்குள் மட்டும் புழங்கி போய்விட்டது. ஆனால் ராமகாதை அப்படியல்லாமல் அயலகமெங்கும் பரவிக்கிடக்கிறது.

கம்பன் போன்ற பெருங்கவிகள் இம்மண்ணில் தோன்றும் முன்னமேயே இரண்டு பெண்கள் பாரதம், இராமாயணம் பற்றிய முன்னுரையைக் கொடுத்துச் சென்றுள்ளனர். சைவ மரபின் தோற்றுவாயான காரைக்கால் பேயும், (காரைக்காலம்மை) வைணவப் பாவைபாடிய அரங்கனார் காதலி ஆண்டாளும் இலங்கைக் கோன் இராவணனைப் பற்றிப் பதிவு செய்துள்ளனர்.

திருமால் இராமாவதாரத்தில் ராவணனை வதைத்தல், போராடல், சந்ததிமுறை ஆகியவற்றைப் பற்றி ஆண்டாளும், இமயமலையைத் தூக்குதல், அதனால் இருபது தோள்கள் நசுங்கி கானம் பாடும் திறத்தைப் பற்றிப் பேயாரும் பதிவு செய்துள்ளனர். வாழ்மொழி மரபுப்படி இலங்கை மன்னன் கதையையும் அவனைப்பற்றிய குறிப்புகளை இருவரும் எவ்விடங்களில் கையாண்டுள்ளனர் என்பதைக் "காரைக்காலம்மையார் -

ஆண்டாள் பாடல்களில் இராவணத் தொன்மையும் பதிவுகளும்" என்ற இக்கட்டுரை சான்றுடன் விளக்குதலே இவ்வாய்வின் நோக்காகும்.

## காரைக்காலம்மையாரும் ஆண்டாளும்

கி.பி.2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செய்யப்பெற்ற மணிமேகலை என்றும் காவியத்தில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், ஆசீவகம், உலோகாயதம், வைதீகம் முதலிய பல சமயங்கள் உள்ளன"1 (பக் : 248) என்கிறார் டாக்டர் மா.ரா. நிலையில்லா வாழ்வில் நீயே போதும் என நினைத்துக் கவின்பெறும் பூவுடலின் அழகொழிந்து ஈமத்தில் (சுடுகாடு) அலைந்தாடும் பேயுருவம் கொடு என்று அரனிடம் கேட்டால் காரைக்காலம்மையார். சைவப் பக்தி இலக்கிய மரபைத் தோற்றுவித்த பெருமாட்டியானவள். திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு முறையைப் பதிக மரபில் கையாளுவதற்கு மூலக்காரணமானவரும் இவரே. இச்செய்தியை...

"இறுதிப் பாடலில் நூற்பயன், பாடியவர் பெயர் சொல்லும் மரபு முதன்முதலாக இவர் உருவாக்கியது"2 (பக் : 106) என்கிறார் முனைவர் சு.வேங்கடராமன். இதுமட்டுமல்லாது பக்திப் பாடல்களுள் சங்கத்தமிழிசைப் பண்ணைக் பயன்படுத்திப் பாடியவராதலால் தென்னிந்திய இசைகளின் தாய் (*Mother of Sounth Indian Musics*) எனப்பட்டார். மாலவனே அல்லாது மற்றொரு மானிடரை மனதளவிலும் நினையேன் என்ற கொள்கையை அடி நெஞ்சில் ஆழப்பதித்தவர் ஆண்டாள். "மல்லிநாடாண்ட மடமயில்" என்று தனியன்களும் "பாடவல்ல நாச்சியார்" என்று பிள்ளைலோகஞ்சீயர் தனியன் வியாக்யானமும் உரைக்கின்றது. சங்கப் பண்பாட்டின் சாரமாகத் திருப்பாவை விளங்கும். இவரைப்.,

"பக்தி நெறிக்காலக் கவிஞர்களுள்ளே இவருக்கு முதலிடம் கொடுத்தார் எஸ் வையாபுரிப்பிள்ளை என்ற கருத்தைக் காத்திரமாகப் பதிவு செய்துள்ளார் முனைவர் ம.பெ.சீனிவாசன்"3 (பக் : 122) காரைக்காலம்மையார் பொ.ஆ. 6 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்று ஊகிக்க இடமுண்டு. ஆண்டாள் காலம் பொ.ஆ. 731 - ஆண்டின் பிற்பகுதி என்று சில ஆய்வுகளின் மூலம் அறுதியிட்டே கூறலாம். காரைக்கால் பேய்ச்சொல் சிவனின் காபாலிகக் கூத்தையும், பல வகையான ஆடல்களையும் (கரணம்) கூறுகின்றார். ஆண்டாள் மாயோனின் மீது கொண்ட உணர்ச்சிமயமான காதலையும் (*passionate love*), அவள் உள் நிகழும் மாற்றங்களையும் விளக்குகின்றார். தொல்காப்பியர் கூறும் பத்துவகையான உடற்கூறு மாற்றங்களைப் பொருத்திப் பார்த்தால் அத்தனையும் கோதைப் பாடல்களில் பொருந்தி நிற்கும் அந்த அளவிற்குக் காதற்சுவை நிறம்பி வழியும் பாசுரங்களாகப் படைத்தளித்துள்ளார்.

காரைக்காலம்மையார் (பேயார்) பாடலில் இராவணத் தொன்மையும் பதிவும்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் பதினோராம் திருமுறையான பிரபந்தமாலையில் பேயாரின் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழிலக்கிய வரலாற்றில் முதன் முதலில் அந்தாதி, இரட்டை மணிமாலை ஆகிய சிற்றிலக்கிய வகைகளைத் தொடங்கி வைத்த பெருமை காரைக்காலம்மையாரையே சாரும். அந்தாதி வகையிலமைந்த பாக்கள் பதிற்றுப்பத்தில் நான்காம் பத்திலும், ஐங்குறுநூற்றில் தொண்டிப்பத்திலும் இடம்பெறுகின்றன. காரைக்காலம்மையார் மூன்று படைப்புகளைப் படைத்தளித்துள்ளார். 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் (22 பாடல்கள்) 2. திருவிரட்டை மணிமாலை (20 பாடல்கள்) 3. அற்புதத் திருவந்தாதி (101 பாடல்கள்) ஆகியன. படைப்பு வெளியில் தன்னை ஒரு படைப்பாளியாகத் தகவமைத்துக் கொண்டு இறைவனின் ஆடல்களையும், கூத்தின் அசைவுகளையும் தடம் மாறாமல் பதிவு செய்த அம்மையார் மொத்தம் 143 (22+20+101) தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார்.

“திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பன இவற்றுள் கடைசி நூலே அம்மையாரின் வரலாற்றை ஓரளவு சேக்கிழார்க்கு அளித்தது”4 (பக் : 123) என்கிறார் டாக்டர் மா. இராசமாணிக்கனார். 143 பாக்களைப் பாடிய காரைக்காலம்மையார் ஒரே ஓர் இடத்தில் மட்டுமே இராவணனைப் பற்றிய குறிப்பினைத் தருகிறார். அப்பாடல்.,

“அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தளமும் நீ முரித்த வாறென் -
முடித்தலத்தின்
ஆறாடி ஆறா அலையாடி அவ்வனலின்
நீநாடி நெய்யாடி நீ ”5
(திரு இரட்டை : 14 ; 1 — 4 )

இராவணனை “அரக்கன்” என்றே குறிக்கின்றார். இப்பாடல் கூறும் தொன்மைக் கதையானது இராவணன் தான் என்னும் அகந்தையால் இறைவன் வாசம் செய்யும் கயிலாய மலையைத் தனது பத்துத் தலை இருபது தோள்களாலும் தூக்க முயற்சித்தான். அவன் ஆணவத்தை அழிக்க கால் கட்டை விரலால் மலையை அழுத்தினார். உடனே ராவணன் தோள்கள் நசுங்கி ஆ… ஆ… அ எனக் கத்தினான் என்ற செய்தியை இப்பாடல் தெரிவிக்கின்றது. இத்தொன்மையைப் பேயார் பதிவு செய்துள்ளார். ஏன் இவர் ராவணன் பற்றி பல இடங்களில் சொல்லாமல் ஒரே ஓர் இடத்தில் பதிவு செய்துள்ளது நுண்மையாய் நோக்குதற்குரியது.

ஆண்டாள் பாசுரங்களில் இராவணத் தொன்மையும் பதிவுகளும்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலாயிரம் தொகுதியில் ஆண்டாளின் இரண்டு படைப்புகளைத் தொகுத்துள்ளார் நாதமுனிகள். அவை., 1. திருப்பாவை, 2. நாச்சியார் திருமொழி. திருப்பாவை (30 பாடல்கள்), நாச்சியார் திருமொழி (143 பாடல்கள்) பிரபந்தத்தில் ஆண்டாள் பாடிய பாசுரங்களாவன 173 (30+143). திருப்பாவைக்கு ஆண்டாள் புதுப்பெயர் சூட்டுகின்றார்.

“அங்கப் பறை கொண்ட ஆற்றை
அணிபுதுவை
பைங்கமலத் தந்தெரியல் பட்டர்பிரான்
கோதை சொன்ன
சங்கத்தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கு பரிசுரைப்பார் எமக்கேலோர்
எம்பாவாய்”
6 (திருப்பாவை ; 30 : 2 - 5)

இப்பாடலில் திருப்பாவையைச் “சங்கத்தமிழ் மாலை முப்பது” என்றே குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் பாவைப்பாட்டு, பாவை ஆடல் போன்றவற்றைப் பற்றிக் கூறியுள்ளார். தைநீராடல், தையத் திங்கள் நீராடல் போன்ற பதங்கள் சங்கநூற் பதங்களாகும். அதனை நோன்பு முறையாகவே முறைப்படுத்தி சங்க காலப் பாவைப் பாட்டு மரபின் தொடர்ச்சியாக விளங்குகிறது ஆண்டாள் பாடிய திருப்பாவை. பாவையில் மூன்று இடங்களில் இராவணன் பற்றிய குறிப்பு உள்ளன. அவை இராமாயணத் தொன்மையின் வழி ராவணனைக் காட்டுகின்றது. அவை.,

“கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான்
தந்தானோ”
7 (திருப்பாவை ; 10 : 5 - 6)

இப்பாடல், இராவணனின் தம்பியான கும்பகரணனைக் குறித்தாலும் இராவணன் சந்ததியினர் என்ற பதிவினையே கொள்ள வேண்டும்.

“பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக்
கோமானைச் செற்ற”
8 (திருப்பாவை ; 12 : 4 - 5)

இராமன் கோபம் கொண்டு இலங்கை அரசனை வீழ்த்தியமையை இப்பாடல் கூறுகின்றது. பேயார் இராவணனை அரக்கன் என்றார், ஆனால் ஆண்டாளோ இலங்கை கோமான் என்னும் பதத்தைக் கையாண்டுள்ளமை வியக்கத்தக்கது. திருப்பாவை மட்டுமல்லாது நாச்சியார் திருமொழியிலும் ஐந்து இடங்களில் இராவணன் குறித்த பதிவுகளைப் பதிவு செய்துள்ளார் ஆண்டாள். அவை.,

“கடலை அடைந்து அரக்கர் குலங்களை
முற்றவும்
செற்று; இலங்கையைப் பூசலாக்கிய
கேசவா” 9
(நாச்சியார் ; 16 : 3 - 4)

கடலில் பாலம் கட்டி இலங்கை சென்று இராவணன் சேனைப்படைகளை அழித்தொழித்தவனே என்கிறார். பாலம்

கட்டி இலங்கை சென்ற தொன்மையைக் காணலாம்.

“பூங்குருந்தேறி இருத்தி
வில்லால் இலங்கை அழித்தாய் நீ
வேண்டியதெல்லாம் தருவோம்”
*10 (நாச்சியார் ; 16 : 3 - 4)*

இலங்கையை வில்லால் அழித்த செய்தி இப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“மாதலி தேர் முன்புகொல் கொள்ள
மாயன் இராவணன் மேல் சரமாரி
தாய்தலை அற்றற்று வீழத் தொடுத்த
தலைவன் வரவெங்கும் காணேன்”
*11 (நாச்சியார் ; 16 : 3 - 4)*

இராம இராவணப் போரில், தசமுகனின் பத்துத் தலைகளை ஒவ்வொன்றாய் இராமன் கணைகளால் களைந்ததைப் பற்றி இப்பாடல் பேசுகின்றது. இதில் மிக நுட்பமான தொன்மை அடங்கியுள்ளது.

“கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட
குமரனார்” *12 (நாச்சியார் ; 97 : 3)*

இப்பாடல் இலக்குவன், இராமன், சீதை மூவரும் குடிலில் (பஞ்சவடி) தங்கியிருந்த போது அந்த குடிலிருக்கும் வனத்திற்கு உரிமையுடையவளான சூர்ப்பனகை வந்து அழகான இருவரையும் பார்த்து ஆசைகொண்டு மூக்கருபட்ட செய்தியைக் கூறுகின்றது. சூர்ப்பனகை இராவணனின் தங்கையாவாள். இப்படியாகப் பல செய்திகளை ஆண்டாள் தனது படைப்புகளில் இராவணத் தொன்மையைப் பற்றி விரிவாகப் பதிவுசெய்துள்ளார். தமிழ்ப் பண்பாட்டில் எச்சமாகிப் போய்விட்ட வாழ்மொழி மரபிலிருந்து அச்சேறி உலகெங்கும் பரவிய இதிகாசங்காசமான இராமாயணக் கதைமாந்தனான இராவணன் குறித்தப் பதிவுகளைப் பேயாரும், கோதை நாச்சியாரும் 9 இடங்களில் கையாண்டுள்ளனர்.

## முடிவுரை

இந்திய ஒன்றிய இதிகாசங்களில் இராமாயணம் பெருமளவில் பரவலாக்கம் அடைந்துள்ளது. வாய்மொழிக் கதைகளாகவும், பாடல்களாகவும் வழங்கி வந்த இராம கதை சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சான்றோர் இலக்கியங்களான செவ்விலக்கியங்களிலும் இதிகாசக் கதைகள் உள்ளன. இராமாயணம் குறித்த பதிவு புறநானூற்றில் அதிகமாய் உள்ளது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் சங்ககால இசை மரபைப் பக்தி இயக்கத்தின் வழி மீட்டெடுத்தனர். நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவரான காரைக்காலம்மையரும், ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவரான ஆண்டாளும், சிவன், திருமால் ஆகியோரின் சிறப்புகளைப் போற்றிப் பாடும் போது இதிகாசக் கதைகளையும் தொன்மையையும் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

இராமாயண மகாபாரதத்தில் பல கதாப்பாத்திரங்கள் இருப்பினும், ஏன் இராவணன் எனும் அரக்கனைப் பற்றிப்

பேசவேண்டும்? தாம் பாடிய பாடல்களில் ஒரே ஓர் இடத்தில் மட்டும் இராவணனைக் குறிப்பிடும் பேயார், குறிப்பிடாமலே விட்டிருக்கலாமல்லவா! அவனை அரக்கனென எண்ணி, அவன் குறித்த செய்தியைப் பாடாமல் கடந்திருக்கலாம் என ஊகிக்கத் தோன்றுகின்றது. இலங்கைக் கோன் என்று இராவணனைக் கூறும் ஆண்டாள் மாலுக்கு எதிரியென்று பாடாமலிருந்திருக்கலாம். இராவணனைப் பாட வேண்டிய கட்டாயம் இல்லை. இருப்பினும் பாடியுள்ளனர் என்பதை நோக்கும் போது, இராவணன் எனும் மானுடத்திடமிருந்தே சிவானிய பக்தி மரபு உச்சம் தொட்டிருக்கிறது என்பதை உணரலாம்.

சாம கான இசைமரபுக்கு நாயகமானவன், இராமனுக்குச் சரிகரான வீரன் என்னும் தொன்மைக் கதை மண்ணில் நிலவுதாலும், இராவணனின் செய்திகள் புராண, இதிகாசங்களில் மிகையாக விரவிக் கிடப்பதாலும், அவனைப் பற்றிய செய்திகள் பரவலாக்கம் பெறவும், இராவணத் தொன்மையைத் தாம் பாடிய பாடல்களில் காரைக்காலம்மையார், ஆண்டாள் இருவரும் தொன்மை மாறாமல் பதிவு செய்துள்ளனர் என்பதை இவ்வாய்வுக் கட்டுரைத் தக்கச் சான்றுகளுடன் மெய்ப்பிக்கின்றது.

துணைநூற் பட்டியல்

சண்முகசுந்தரம்.சு., தமிழ்ப் பண்பாட்டு வரலாறு (மா.ரா.களஞ்சியம் - II), காவ்யா, இரண்டாம் பதிப்பு - 2017, சென்னை.

சிற்பி பாலசுப்பிரமணியம் - நீல பத்மநாபன்., புதிய தமிழ் இலக்கிய வரலாறு - II, சாகித்திய அகாதெமி வெளியீடு, முதல் பதிப்பு - 2013, சென்னை.
மேலது., ப.122.

இராசமாணிக்கனார்.மா., பெரியபுராண ஆராய்ச்சி, அலமு பதிப்பகம், முதற்பதிப்பு - 2002, சென்னை.

முருகேச பாண்டியன்.ந., காரைக்காலம்மையார் பாடல்கள் (மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி), டிஸ்கவரி புக் பேலஸ், முதற்பதிப்பு - 2019, சென்னை.

முருகேச பாண்டியன்.ந., ஆண்டாள் பாடல்கள் (திருப்பாவை, நாச்சியார் திருமொழி), டிஸ்கவரி புக் பேலஸ், முதற்பதிப்பு - 2019, சென்னை.

இளம்பூரணனார். உ.ஆ., தொல்காப்பியம் (எழுத்து - சொல் - பொருள்), சாரதா பதிப்பகம், 15 ம் பதிப்பு - 2019, சென்னை.

—

**ச. வாசுதேவன்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இலக்கியத்துறை, மொழிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613010

# குறுங்கவிதைகள்

1. பேனா:
மை தீர்ந்த உடனே
வீசியெறியப்படுகிறது-
பெண் (PEN) என்ற பெயர்
கொண்டதால் தானோ!

2. காதல் மாயம்:
அவள் என்னை சிறை பிடிக்கவும்
இல்லை:
சித்திரவதை செய்யவும் இல்லை-
ஆனால் அடிமைப்படுத்திவிட்டாள்!

3. என் இமைகள்:
என் இமைகள் இமைத்துக்கொண்டே
இருக்கும்....
என் விழியாகிய உனக்கு வியர்ப்பதினால்:

4. தூக்கம்:
விழி பெண் அவளை சிறைப்பிடித்ததால்,
அவள் கொண்ட மயக்கம்!

5. முத்தம்:
என் கண்ணங்கள் கூட ஓர் வரலாற்று
சான்று தான்:
என்னவள் தன் அரிய முத்தங்களை
அதிகம் பதித்த இடமல்லவா? ஆதலால்:

--
இவள்,
கவி,
(பார்கவி. செ. M.E.)
வல்லூர், மன்னார்குடி.



---

# அம்மாவும்... ஆட்டுக்குட்டியும்.!

அம்மா முன் செல்ல
பின்னால் விளையாடிக்கொண்டு
சாலையோர மரக்கிளைகளின் பூக்களைப்
பறித்து
வீசியெறிந்து குதுகாலித்துச்செல்லும்
சிறுபிள்ளைகளின்
சாயல் ஒத்துக்கிடக்கிறது
மேய்ச்சல் முடிந்து
தலையில் இலைக்கட்டோடு திரும்பும்
மேய்ப்பரின் முன்னே
அங்கும் இங்கும் மேய்ந்துகொண்டே
வீடு திரும்பும்
ஆடுகளின் அழகு...!

# தேர்தல் வாசம்..!

ஊருக்குள் சாலைபோடுகிறார்கள்
தார் வாசம் வருகிறது
என்றாள் மகள்
நான் சொன்னேன்
அது தேர்தல் வாசமென்று...!

—

நேசன் மகதி

# இலாபத்தின் பாவம்

நேற்றைய கனவொன்றைத் தோலுரித்து
ஞாயிற்றுக்கிழமையின்
புதிய மாமிசமென
வீதியில் தொங்கவிடுகிறேன்

ஆர்ப்பரித்துச் சூழும்
பெருங்கடலின் அலையாய்
இரகசியமாய் களவாடி
யாவற்றையும் சுவைத்திட முந்தும்
மானமற்றவாய்களைப்
பரிதாபத்துடன் நோக்கிப்பெயர
பழக்கிவிட்டது காலம்

சலனங்கள் ஏதுமின்றித்
தோரணையாய் அருகிருந்து
வீசியெறியும் பயனற்ற துண்டுகளுக்காய்
காக்கையாய்
நாய்களாய் காத்திருக்கும் வாழ்வை
ஏற்று இயங்கிடும் தர்மத்தை
வழக்கம்போல் கடக்க நேர்கிறது

மீன்கொத்தியின் விழியால்
விலைமதிப்பைக் கூர்ந்துநோக்கி
இலாபத்தின் பாவத்தில்
மலையென வருவாய் ஈட்டும்
தந்திர நெருக்கடிக்கும்
பஞ்சமில்லை சுழலில்

யோசனை மழுங்கி
அடுத்தவர் அழிவிற்காய்
சமாதிகள் தயார்செய்யும்
நரத்தன உண்ணிகள்
மிகையாகிச் சூழ்வதைத்
தவிர்த்திட இயலவில்லை

நியாயங்களின்றி விற்றிடும்
மாமிசத்தில் மொத்தமும்
கொஞ்சம் சுவையும்
நிறைய விசமும் உள்ளதை
ஜொலிப்பான விளம்பரங்கள்
சிந்தனையின் மாளிகைகளைப்
தரைமட்டமாக்கி இரசிக்கின்றன

அடர்ந்த பேரிருளே விரைந்துவா
தூங்கவிழைகின்றது
ஒட்டடைப் படிந்து
மாசுற்ற ஞானம்.

## பகுத்தறிவு விதைத்தநிலம்

சாதிமத பேதமென்னும்
சாக்கடையில் உழலாமல்
நீதிநேர்மை சமத்துவத்தை
நிலைநிறுத்த பாடுபடு
பழமையென்னும் பாழ்நிலத்தில்
பயிரொன்றும் வளராதே
பகுத்தறிவு விதைத்தநிலம்
பயன்விளைக்கும் மறவாதே
கண்ணுக்குக் கண்ணாகும்
பெண்ணிணத்தை முன்னேற்று
கடவுளின் நம்பிக்கையால்
கண்மூடித்தனம் கொன்றகற்று
எப்பொருளை யாருரைத்தும்
ஏற்காமல் ஆராய்ந்து
மெய்ப்பொருளை வள்ளுவனார்
வழிநின்று மனம்ஏற்று
யாவருள்ளும் எழுந்தருளும்
இறைநிலையைக் கண்டறிந்து
ஏற்றநன்றி ஆற்றிடுவே
எல்லாரும் ஆண்டவரே
விண்வெளியில் தேவரில்லை
வியாழன்வெள்ளி திங்கள்செவ்வாய்
வேற்றுக் கிரகமென்று

அறிவியலால் தெளிவுறுத்து
நாள்கிழமை பார்த்திங்கே
நடப்பதில்லை புவியியக்கம்
நல்லமனம் உள்ளவர்க்கு
நம்பிக்கையே சுபமுகூர்த்தம்
இரைதேடி குறுக்கோடும்
பூனைகளை வையாதே
எழுகின்ற கதிரவனில்
கறையில்லை அஞ்சாதே
கல்வியொன்றே மூலதனம்
கல்லாமை மூடத்தனம்
உள்ளொளிரும் பகுத்தறிவு
உரிமைமீட்டு உயர்வளிக்கும்.

## சிறகுகளாலான வேர்கள்

இருட்டின் மௌனந்தகர்க்கும்
தொடுவான மின்னலாய்
வெட்கத்தோடு நோக்கும்
தீப்பொறியொன்று ருசித்துத் தின்கிறது
தனிமையில் என் யாவற்றையும்...
இடைவிடாமல் தோற்றி
விழித்திரை தகர்க்கும்
பெருத்த திமிரைச்
செல்ல தொடுதல்களால்
தண்டிக்க முயன்று
கடலலைகளாய் திரும்புகிறேன்
மீண்டும் பலமுறை....
தாமரைகளால் நிறைந்து மோதிடக்
காத்திருக்கும் திறன்மிகுவழியில்
முதுமரத்தின் வேர்கள்
நெருங்கித் துளிர்விடும்
சிறகுகளான தவிப்புகளைப்
பெருவெளியெங்கிலும்!

## கரிய ஓவியங்கள்

திறன்மிகு கூரியவாளின்
வெறிகொண்ட தைத்தலால்
குருதிப்புனலாடி
நேர்த்தியாய் உள்நுழைகிறது
துரோகத்தின் இரகசிய சாசனம்....
அதிகாரத்தின்
சாணம் தோய்த்த விரல்களால்
தூய சுவரெங்கும்
இருமாந்து தீட்டப்படுகின்றன
பாசாங்கின் விகார ஓவியங்கள்...
அடிவருடி செழிக்கும்
துருவேறி செரிந்த
கூன்முதுகின் வளைவில்
சருக்கியாடும் வஞ்சகம்
எப்போதும் விழுவதில்லை
காயமுடன் கீழே...
நேரானப் பாதையெங்கும்
தீயின் பெருநதி விரட்டிட
ஒளிய மறைவின்றி
எளிதில் கொய்யப்படும்
தர்மத்தின் நலிந்தசிரங்கள்...
பனைமர நிழலாய் பரவி
உயரத்தில் நிலைக்கும்
ஏகபோக மதிப்புகள்
சற்றும் சலைத்திடாமல்
கோடை தனல்வெளியை
உயிரெங்கும் புணர்த்தி
சிதைக்காமல் விடுவதில்லை
வன்காற்றிடை மீண்டெழும்
நலிந்த நுண்துகள்களை!

— பொன். தெய்வா,
ஐவேலி.



# நான் விழுவதைப் பார்த்தாய்

எழுவதைப் பார்க்கவும்
பக்கத்திலிரு.

எந்த இரவும் வீணாவதில்லை
உன் நினைவு வீணையை
மீட்டிக் கொண்டிருப்பதால்.

உன் சிரிப்புக்கும்
என் அழுகைக்குமிடையே
ஊடாடுகிறது இனம்புரியாத வலி.

இரவின் பெரும்பகுதி
இருட்டுக்கு பயந்து ஒளிந்து கொள்கிறது
மலைகளிலும் வனங்களிலும்.

உன் வீரமும் விவேகமும்
கண்கூடாகக் கண்டபிறகு
நீ பெற்ற வெற்றியைப் போற்ற
வேண்டிய அவசியமில்லை.

எல்லாம் தெரியும்
வெளியில்...
ஏதும் தெரியாத பலர்.

முன்பைவிட அதிகம் சிரிக்கிறாய்
உன்னில் கோலோச்சுகிறது
கபடம்.

புல்லின் நுனியில்
அமர்ந்திருக்கும் பனித்துளிக்கு
கதிரவனைக் கண்டதும்
ஓடிப் போகும்படி
அப்படியென்ன அவசரமோ?
அந்திவரை
இருந்து விட்டுப் போயிருக்கலாம்.

உன்னைத் தேடி நானும்
என்னைத் தேடி நீயும்
மனங்களைத் தொலைத்திருக்கிறோம்.

பலகோடி விண்மீன்
விழிகளைக் கொண்ட வானம்
இரவெல்லாம் விழித்திருந்து
கண்காணிக்கிறது பூமியை.

எவ்வளவு பெரிய கண்டத்தையும்
ஆகப் பெருங் கடலையும்
இலகுவாய்க் கடக்கிறது
பெயர்த் தெரியாதப் பறவைகள்.

எனக்கு
தேநீர் கொண்டுவருகிறாய்.
அந்தத் தேநீர்
என் பெயரை உச்சரித்தபடி
வருகிறது.
என் கை சேர்ந்ததும்
கோப்பைக்கு
நன்றி சொல்லி முடித்து
உன்னையும்
தேநீரையும் ரசித்து
சுவைக்கத் தொடங்குகிறேன்.



—

பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# கவிதைப் பொங்கல்

விவசாயின் கண்ணீரில்
விளைந்த புத்தரிசி,
மண்ணைக் காவியமாக்கிய
புதுபானை,
நினைத்தாலே இனிக்கும் செங்கரும்பு,
தித்தித்து திகட்டும் வெல்லம்,
திசைக் காட்டும் சூரியன்,

கற்பக விருட்சத்தின்
தை மாத பரிசு
செங்காள் நாரையின்
அலகு வடிவம் கொண்ட
பனங்கிழங்கு,

தங்க நிறத்தில் ஜொலிக்கும்
தேன் சிந்தும் வாழை,
கன்னியரின் கழுத்தில் ஏறி
தாலியாய் அமரும் மஞ்சள்,

ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே
மக்கள் மனதில் வரும்
ஆவாரம் பூக்கள்,
வளி மண்டலத்தை சுத்திகரித்து
மண்ணையும்,மனிதரையும்
பாதுகாக்கும்
அறிவிக்கப்படாத ராணுவ வீரர்கள்
இயற்கை அன்னையின்
கசந்து இனிக்கும்
வேப்பிலை
என

பொங்கலுக்கு வரும்
பொருள் எல்லாம்
எதோ ஒரு தவமிருந்து
தை மகளால் தான்
விடுவிக்கப் படுகிறார்கள்,

*

வரிசையாகவும், நேராகவும்,
வைக்கப் பட்டிருந்தது
சிலுவைகள் அனைத்தும்
ஆனால் என்ன
குறுக்காவும், நெடுக்காகவும்
அவர்கள்
ஏற்கனவே
வாழ்ந்து முடிந்திருந்தார்கள்...

*

உங்கள் உள்ளங்கைகளும்
ஒருநாள்
உலகமாக வேண்டுமெனில்
விடுவித்து விடுங்கள்
சிட்டுக் குருவிகளை
சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டக்
குருவிகள்
வாழ்நாள் முழுவதும்
பெருமையுடன் பேசப் போவது
தன்னைப் பற்றியல்ல
தான் பெற்ற சுதந்திர உலகத்தைப்
பற்றி தான்...

*

பலூனில் ஊதப் படுவது
வெறும் காற்றல்ல
குழந்தைகளின் கனவுகள்

*

## மழைக் காலம்

வெள்ளக் காடு என
பெயர் வைத்ததும்

சரி தானா ?
மழையின் அகோர பசிக்கும்
ஈவு, இரக்கம் கிடையாதா ?

மழைப் போற்றுவதும்,
கொஞ்சம் எளிது தான்,
இனி
மாமழைப் போ(ற்றுவ)தும்
தான் எளிதல்ல,

இனி மழைக்குக்
குடைப் பிடிக்க வேண்டாம்,
நிழற்குடைகளைத்
தாக்குப் பிடிக்க முடியவில்லை,

போர் மேகங்கள்
சூழ்ந்த போதும்
கவலையில்லை,
மழை மேகங்கள்
தான் அச்சுறுத்துகின்றன,

தண்ணீர் தேசத்தை
மழைத் துளிகள்
மாற்றி விடாதே?
கண்ணீர் தேசமாய்,

மழையே
கடல் வரை தான்
உனதுப் பயணம்,
அதற்குள்
எங்களுக்கோ
இது
இறுதி பயணமா ?

மழை எவ்வளவு
பெய்தது ?
ஆட்டுரலைப் பார்க்க
வேண்டும்,
நாங்கள்
இப்போது
உரலைத் தான்
தேடிக் கொண்டிருக்கிறோம்,

மண்ணுக்கு ஈரம் கொடுக்கும்
மழைக்குக் கொஞ்சம்
ஈரம் ஏன்னில்லை ?

(யாரும் மழையைப் பழித்ததாக நினைக்க
வேண்டாம், மக்கள் படும் துயரை
எண்ணியே எழுதப்பட்டது,வாழ
வைக்கும் மழையே வாழ்க )

*

உணவகத்தின் முன்பு நின்று
கொடியதைத்துக் கொண்டிருக்கும்
பெரியவர்
பசியின் நிறம் தெரிகிறது

*

பேருந்து நிலையம் அருகில்
சுற்றுசூழல் பாதுகாக்க ஒற்றுமையாய்
சுவரில் சர்வ சமயக் கடவுள்கள்

## விடுதலை

உணவகத்தின் முன்பு நின்று
கொடியதைத்துக் கொண்டிருக்கும்
பெரியவர்
பசியின் நிறம் தெரிகிறது

*

உங்கள் உள்ளங்கைகளும்
ஒருநாள்
உலகமாக வேண்டுமெனில்

விடுவித்து விடுங்கள்
சிட்டுக் குருவிகளை
சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டக்
குருவிகள்
வாழ்நாள் முழுவதும்
பெருமையுடன் பேசப் போவது
தன்னைப் பற்றியல்ல
தான் பெற்ற சுதந்திர உலகத்தைப்
பற்றி தான்...

*

வரிசையாகவும், நேராகவும்,
வைக்கப் பட்டிருந்தது
சிலுவைகள் அனைத்தும்
ஆனால் என்ன
குறுக்காவும், நெடுக்காகவும்
அவர்கள்
ஏற்கனவே
வாழ்ந்து முடிந்திருந்தார்கள்...

—

இரா. மதிராஜ்,
காங்கேயம்,
அலைப்பேசி: 9788475722

# மிதந்து செல்லும் கவிதை

மலரென்றும் மயிலென்றும்
நிலவென்றும் நதியென்றும் வேண்டும்

பொன்னென்றும் வைரமென்றும்
தேவதை என்றும்
ஏன் தெய்வமென்றும் கூட
போற்றுகிறதே அவளை
உங்களின் கவிதைகள்!

பெண்மையை
மென்மையாகத் தாங்கிய
அந்தக் கவிதைகளின் வெள்ளைநிறத்
தாள்களுக்குள்
படர்ந்திருக்கிறது
கண்ணுக்குப் புலப்படாத
ஒருவித கருமை!

ஆம்...
ஒரு மனிதியாய்
உயிரும்
உணர்வுகளும்
சுயமும் நிறைந்த
ஒரு பெண்ணாய் மட்டும்
அவளைத் தாங்கிக் கொள்வதில்லையே
உங்களின் கவிதைத் தாள்கள் ?

ஒன்றைச் சொல்கிறேன் கேளுங்கள்

இனியேனும் அவளைப் பற்றிய
உவமைகளைக் கைவிடுங்கள்
உயிரற்ற உவமைகள் விடுத்து அவளின்
உணர்வுகளை உயிர்ப்பிக்கும்
வரிகளைப் பாடுங்கள்!

அவளை அவளாக மட்டுமே

உங்களின் கவிதைகளுக்குள் இனி
எப்போதும் போற்றுங்கள்!

வெள்ளை நிறத் தாள்களில்
கண்ணுக்குப் புலப்படாமலேயே
படிந்திருக்கும் கருமைகளை
அகற்றுங்கள்!

அந்தத் தூய்மையான
கவிதைகளைத் தாங்கிய
வெள்ளை நிறத் தாள்கள்
அண்டப் பெருவெளி எங்கும் காற்றில்
மிதந்து செல்லட்டும்!

—

பி. ஹேமா,
முசிறி.

---

# காற்றில் கரையா கனவுகள்.

ஆசையின் அலைவரிசை
மூளைக்குள்ளே
முட்டிக்கொள்ள.

வாழ்வின் நேர்வரிசை
வழிமுறைகளை
தட்டிக்கொள்ள.

பயணமொன்று
நிகழ்ந்தது கனவுகளும்
பிறந்து.

வாழ்கையென்று
ஆனதே வலிமைவந்து
சேர்ந்ததே.

உயிர்வளி குறைந்திடும்
போதும் மனவலி
நிறைந்திடும் போதும்.

மரண வழி திறந்திடும்
போதும் என்
கனவினொளி
அனையாதே
ஒருபோதும்.

காற்றில் கரையும்
கல்லெண்ணெய் போல்
துளிநீரில் மிதக்கும்
நல்லெண்ணெய் போல்.

கரையாதே ஒட்டாமல்
அமையாதே
ஒருபோதும்.

நெருங்கிப்போக
கரைந்து போகும்
கானல்புனல்.

பொழுதுசாய நீண்டு
போகும் மனிதநிழல்.

முடிவிலியாய் நீளாது
வலியின் நகல்.

காய்ச்சக் காய்ச்ச
சுவைமாறா பால்போல்.

பேசப் பேச திவிட்டாத
தமிழ்போல்.

பிரியாத உரியென
மறக்காத கரியென.

காற்றோடு கானங்கள்
ஆகிடுமே கனவுகள்.

பலிக்காமல் போக பகல்
கனவன்று.

இருளையே பகலாக்கி
வலியையே ஒளியாக்கி.
வாழ்விற்கு விடியல்
தரும் கனவிது.
காற்றில் கரைய
கனவென்ன கற்பூரமா?

— கோ. தனுசன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

# ஓடி ஓடி மறைந்திட்டேன்

மலையில் இருந்து வருகின்றேன்
மணலை எடுத்து திரிகின்றேன்

மாநிலம் தாண்டி தவழ்கின்றேன்
மண்வகை பூசி தெளிகின்றேன்

ஊர்கள் பலபல செல்கின்றேன்
உலக நடப்பை அறிகின்றேன்

பள்ளம் மேடு தாண்டுகிறேன்
பைந்தமிழ் பெருமை பேசுகிறேன்

உழவர் மனதில் களிப்புற்றேன்
உலகம் செழிக்க உயர்ந்திட்டேன்

வயலில் பாய்ந்து மகிழ்ந்திட்டேன்
வளரும் செடிகளை தந்திட்டேன்

ஏரி, குளங்களை நிரப்பிட்டேன்
எங்கும் உயிர்களை காத்திட்டேன்

ஓடி ஓடி மறைந்திட்டேன்
ஒன்றே உலகம் உணர்ந்திட்டேன்

ஆழியை நானும் அடைந்திட்டேன்
அழகிய நதியாய் நடந்திட்டேன்

## மாமதுரை

பாண்டியர் வாழ்ந்த பூமி
பைந்தமிழும் செழித்த பூமி
மல்லிகை மலருக்கு தினம்
மங்காபுகழ்தரு பூமி.

நீள் நெடு வீதியும்
தலை நிமிர் கோபுரம்
தமிழன் சுவடு போற்ற
தரணி போற்றும் பூமி.

இறைவி தன் மகளாக
இறைவன் மரு மகனாக
நல்லறம் காட்ட நவின்ற
நனி சொல் பூமி.

வைகை நதி பாய்ந்தாட
வயல் வெளி வளர்ந்தாட
வந்தார்க்கு வாழ்வு அளிக்கும்
வையம் போற்றும் பூமி.

மதபேதம் இங்கு இல்லை
மனிதவாழ்வின் சுக எல்லை
சுங்குடி சேலை அழகிற்கே
சுந்தர அழகர் பூமி.

அணைக்க முடியா தூண்களும்
அழியா அழகு கலைகளும்
சரித்திர பதிவின் வேர்களை
செப்பிடும் செம் பூமி.

கண்ணகி கோவல இணையரின்
காற்சிலம்பில் கதையும் பதிவுறும்
கொல்லர் பட்டறை சிவந்திடும்
கிளிகள் கொஞ்சும் பூமி.

தூங்திருக்கும் தொழில் நகரம்
தென்றல் வீசும் பெரும்சிகரம்
மாமதுரை என்னும் பெயருடனே
மாண்புகள் பெற்ற பெருநகரம்.

—

ஹேமா லதா

# கனவுகளை தேடி தொலைகையில்

தானாக வருகிறது உறக்கம்

சோம்பலை தவிர்த்து விடமால் தூரத்தும்
கனவிற்காக கொஞ்சம் ஓடலாமென
நினைக்கும் போது வரும் அசதி

அவசர வேலைகளில்

அதிக யோசனையை கொடுத்தவுடன்
வீணாய் போன கொட்டவி....

விட்ட ஆவி திரும்புவதற்குள் மீண்டும்
மூளை சேர்வை சந்தித்து விடும்
கொட்டவி

சில நேரங்களில் சாமளித்து ஏதோ ஒரு
வேலையை செய்து முடித்த திருப்தியுடன்
வீடு திரும்பும் கையில் சன்னலோர
இருக்கையில் இருபுறமும் இதமான
காற்று சற்று கண் அயர்ந்தால் அதை
களைக்கும் ஒரு ஆரன் சத்தம்.....

மீண்டும் நடுநிலைக்கு வந்தமர்ந்தால்
யாரோ நம் தோளில் தூங்கி விழ தூக்கம்
துக்கமாக மாறி விட வீட்டை
திறந்தவுடன் வரும் ஒரு அலாதியான
தூக்கம்...
எதிர் சுவரில் ஒட்டிருந்தது.

"இளமையில் சோம்பல் முதுமையில்
துன்பம்" ஏனோ வாசகத்தை ஏற்க
மறுகிறது மனம்...!

—

ச. சத்தியபானு



---

# களிமண் வனம்

யானை சரியாக
வரவில்லையென குதிரையும்
அதுவும் சரியில்லையென
சிறுத்தையுமானது
புள்ளிவைத்து
அழிக்கப்பட்ட மான்

சிறுத்தைக்கு வரைந்த
புள்ளிகளில் மானும் யானையின்
கண்களும் மிச்சமிருக்க

இப்பொழுது
களிமண் வனமாகிறது
சிறுமியின் விரல்கள்!

## அறிவிப்பு

மணிக்கு மூன்றுமுறை
கைப்பேசி அழைப்பு
சிறு சண்டைக்கும்
வாரக்கணக்கில் பேசாதிருத்தல்
நள்ளிரவில் வந்தாலும்
உண்ணச் சொல்லும் கட்டளை
காரணமெதுவுமின்றியும்
பேசிக்கொண்டே இருத்தல்
இவ்வாறெல்லாம்

காதலை அறிவிப்பு
செய்தவாறிருக்கின்றன
பெண் மொழி!

03-மெழுகுவர்த்திகள்

பாடலின் ஒலி வரும் திசைக்கு தூரத்தில்
நடந்து கொண்டிருக்கிறேன்
அசலைவிடவும் அத்தனை
இனிமையில்லாத குரலென்று மிடறுகிற
எண்ணம்

கேட்டதும் நெருங்கி வருகின்றன
இசையின் கால்கள்
வாழ்விற்காக ஒலிபடும்
லயம் உண்மையைக்
கடத்துகிறது இவ்வாறு
'உள்ளுக்குள்ள சக்கரவர்த்தி!'

—

ரகுநாத். வ,
மதுரை.

---

# அவர்களுக்குப் பதில்..

தடுமாற்றத்தில் இருப்பவர்களுக்கு
'அப்பவே சொன்னனே'
என்பதற்கு பதில்
'மீண்டு வர யோசனைகள்'

தன்னை விட கீழ் நிலை
ஊழியர்களைப்பார்த்து
'எல்லாம் எனக்கு தெரியும்'
என்பதற்கு பதில்
'உன் கருத்தை சொல்'

விவாதங்களின் போது
'நான் சொல்வது தான் சரி'
என்பதற்கு பதில்
'நீ சொல் யோசிக்கிறேன்'

கஷ்டப்படுகிறவர்களைப்பார்த்து
'எனக்கு உதவி செய்ய ஆசை தான்'
என்பதற்கு பதில்
'முடிந்த உதவி செய்தல்'..

## எப்போது?...

சொல்லிக்கொடுத்து மட்டும்
உதட்டு வார்த்தையாய் இருந்தால்
மனதின் குரல் எப்போது?

கேட்டு கொண்டடிருந்தே மட்டும்
செயலாற்றி கொண்டிருந்தால்
புத்தியின் காரியம் எப்போது?

அடுத்தவர் வார்த்தையை மட்டும்
நம்பிக்கொண்டிருந்தால்
அனுபவம் பெறுவது எப்போது?

வாசிப்பை மட்டும்
யோசித்து கொண்டிருந்தால்
சுயமாய் சிந்திப்பது எப்போது?

## வார்த்தை ஒன்று தான்...

விடை தெரியா கேள்விகளுக்கு
பதில் வரும் போது
எப்படி? எப்படி?

ஏற்று கொள்ள இயலா கருத்துகளுக்கு
அது எப்படி?

சாத்தியமற்ற செயல்களுக்கும்
எப்படி?

கஷ்டத்தில் மீண்டு வர வேண்டிய
கட்டாயத்திலும்
எப்படி?

கேள்விக்கான
வார்த்தை ஒன்று தான்..
களம் தான் வேறு வேறு...

## வெற்றிக்குப் பின்னே...

நம்மிடம்

கடின இலக்கு கொள்ள நம்பிக்கை

புதியவை தேடும்
எண்ணம்

ஆர்ப்பாட்டமா
அமைதியா என
மனப்போராட்டம்

பிறரிடம்

கிடைக்கும்
பாராட்டு

விஷயமானவன் என
அங்கிகாரம்

தொடர வேண்டும்
என எதிர்ப்பார்ப்பு

## பேசப்படுபவை...

அழுத்தம் கொடுக்கபட்டும்
கிடைக்கா
சகாக்களின்
ஒத்துழைப்பு

தெளிவாய் சொல்லப்பட்டும்
காட்டப்பட்ட
வெளி மனிதர்களின்
அலட்சியம்

இலக்கை அடைய
தொடர் எண்ண ஓட்டத்தால்
ஏற்பட்ட மன அழுத்தம்

இத்தனை கஷ்டங்களுக்கு
இடையிலும் செய்த
விடாமுயற்சி

தோல்வி ஏற்ப்பட்டால்
பேசப்படா

செயல்களும்
அதற்கு கிடைத்த
வெற்றி மட்டுமே

பேசப்படும்...

## அதுவும் உண்டு இதுவும் உண்டு

புதியவை
கற்பதும்

காரியங்கள் எளிமையாக்கும்
வித்தை கற்பதும்

தவறுகள்
சரி செய்ய
யுக்தி அறிவதுமான

மாற்றங்களும்
உண்டு

நமக்கான
நிலைப்பாட்டில்
நம்பிக்கை கொண்டு
உறுதி கொண்டு
மற்றவற்றை
ஏற்கா காலம்
போய்

நடப்பவை
பிடிக்காவிட்டாலும்
நிகழ்வுகள்
சுமுகமாய் தொடர
அனுசரித்து
அனுசரித்து
முழுமையாய்
சுயம் தொலைக்கும்
மாற்றங்களும்
உண்டு

## வாழ்க்கை பயணத்தில்

இப்படி யோசித்தால்

முதல்
முயற்சியில்
செயல்பாட்டில்
வெற்றி சிறப்பு தான்

ஆனால்
சில முயற்சிகளுக்கு பிறகு தான் வெற்றி
சாத்தியப்பட்டாலும்

போராட்டத்திற்கு
பிறகான
வெற்றி என்பதால்
அதிக மகிழ்ச்சி

தக்க வைத்து
கொள்ள உறுதி

மற்றும் ஒரு
புதியவை
முதல் முறையில்
பெற கிடைக்கும்
அனுபவங்கள்

இத்தனையும்
கூடுதலாய்
கிடைக்கிறதே

இதுவும் சிறப்பு தான்

## அதனால்...

திரைப்பட பாடல்கள்
கேட்கும் போது
பாடகனாய் இல்லாவிட்டாலும்
கூடவே முணுமுணுப்பது
இசையும்,பாடல் வரியும்
உள்ளம் தொட்டதால்

உறவுகளின்
தோழமையின்
சந்திப்பில்
அதிகம் பேசாதாவனாய்
இருந்த போதும்

தொடர்ச்சியான
உதட்டு மொழிக்கு
உள்ளத்தில் உள்ளவற்றை
கொட்டுவதற்கு

பொது பொருள் பற்றி
விவாதிக்கையில்
நன்கு தெரித்தும்
மாற்றுக்கருத்து இருந்தாலும்
அமைதி காப்பது
விவாதம்
பிரிவு வரை
சென்று விடக்கூடாது
என்பதால்

எதிர் மனிதனின்
பிடிக்காத பேச்சுக்கு
பதிலாய்
வாய் மொழியும்
முக மொழியும்
வெளிப்படுத்தாமால்
பொறுமை காட்டுவதற்கு
அவர் சங்கடம் தவிர்க்க...

## படைப்பு

யோசிப்பு எண்ணங்களாகி
எழுத்தாகி கவிதை

முடிவுகளுக்கு முன்

செயல் முடித்த
பின் தன்திருப்தி

அத்தனையும் மாற

அவநம்பிக்கைகளுக்கும் பயங்களுக்கும்
ஒரு வெற்றி

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.
கைப்பேசி: 9994920236



## தைப்பொங்கல்...!

மனைவிக்கு
பட்டுப்புடவை,
குழந்தைகளுக்கு
புத்தாடையும்,
உடன் பிறந்தவளுக்கு
மஞ்சள் வண்ணச் சேலையோடு
பொங்கல் சீர்வரிசையும்
செய்ய முடிந்தது...!

வறண்ட பூமிக்கு
பச்சை வண்ணப்
பட்டாடையையுடுத்தி
சென்ற
அந்த மழைக்கு பிறகு...!

—

அ. செல்வராஜ்,
கண்ணமநாயக்கனூர்.

# என் மகாகவிதை

நிலைகொள்ளா உன் நினைவுகளை
நிலம் போல தாங்கியபடி நான்
நடக்கையிலே

வழியில் கடந்த ஆறொன்று உன்
கற்பனைகள் நிறைத்து என்னுள் நீ(ர்)ராய்
ஆர்பரிக்க

அப்படியே நின்ற என்னை
என் அனுமதியே பெறாமல் தொடும்
காற்றைப்போல்
என்னை நீ தொட்ட
கனங்களை எண்ணிக்கொண்டே

அண்ணார்ந்து பார்த்தேன் நான்
ஆகாயமெல்லாம் உன் அழகு முகமாக
தெரிய

காட்டுத்தீயாய்
திகு திகு வெனப் பற்றிக் கொண்டது என்
காதல் தீ

ஐம்பூதமும் நீ
ஐம்புலன்களிலும் நீ



அணைப்பதும் நீ
இணைப்பதும் நீ
உடைப்பதும் நீ
அரவணைப்பதும் நீ

சிற்றிடரோ
பேரிடரோ நீ
ஏற்படுத்து சேதத்தை
சீக்கீரமாய் திரும்பி விடுவேன்
இயல்புநிலைக்கு

— சூர்யகலா சரவணன் B.E,
கண்டிதம்பேட்டை.

---

# எல்லாப் பிழைகளும் ஒன்றுகூடி

எங்கே தவறினோமென
ஆராய்ச்சியில் ஈடுபட
காரணத்தைக் கண்டறியும்
குழு அமைக்கத் தீர்மானித்தன
பிழைகளின் நடத்தை தொடங்கி
நகர்ந்திடும் விசாரணையின் முடிவில்
பெருகத் தொடங்கின
குழுவின் பிழைகள்.
தவறுகளின் காரணத்தைத் தேடும்
தடம்மாறும் மனிதனைப் போல
தமக்குள்ளே நீளும் கரங்களுக்குள்
தொலைந்துபோன நிம்மதியைக் கண்டு
பிழைகளின் மேனிகளில்
முளைத்திடும் முட்களில்
வழியும் குருதிகள்
உருமாறத் தொடங்கின
பேராசைப் பிசாசென.

## நன்றியுள்ளவனாகிறேன்

தவறைச் செய்யும்
மனிதரைப் பார்த்தும்
தவிக்காமல் தவிர்க்கும் நிலையில்
தீர்ப்புக்கு நான்
வாலாட்டும் நன்றியுள்ளவனாகிறேன்.
உயிரைக் கூட்டி
ஆண்டுகளை நீட்டித்து

வாழ்வை ஓட்ட
இருத்தல் அவசியமாகும் போது
கொள்கையும் லட்சியமும்
கூழூட்ட வருவதில்லை
ஆசையின் நாக்கு
நீண்டபடி விரிகையில்
அடிமையானால் என்ன
அரசனானால் என்ன
வயிற்றை நிரப்புதலே
வசதிப்படுகிறது.

## எரியும் கூட்டுக்குள்

சிசுக்கள் கதறிட
கருகும் வீடெங்கும்
கதறல் நீண்டுவர
தப்பாத இலக்குகளில்
குண்டு மழை பெருக
பறவைகளின் வழித்தடத்தில்
ஏவுகணைகள் திசை நிரப்ப
காணும் உயிர்களையே
மண்ணும் புழுவெனவே
துப்பாக்கிகள் தோள் உயர்த்த
நிலையற்றதில் நிலைத்திட்ட
மரணத்தைக் கண்ணுறா
பேராசை மனதில்
பெருமூச்சுக்கும் வழியற்று
பிதற்றவும் முடியாமல்
சுருண்டு விடுகிறது மனிதம்

## அனுபவங்கள் தீட்டித் தீட்டி

அகமெலாம் ஒளிவீசிட
நில்லாத வாழ்வின் பாடம்
நடத்திடும் தேர்வின் வழியே
பாதைகள் திறந்திடும்போதும்
பயணங்கள் தொடர்ந்திடும்போதும்
ஆசையின் ஊஞ்சலிலே
ஆடிடும் எண்ணமதை
ஏடென்றும் எழுத்தென்றும்
வடித்திடும் காவியத்தில்
நிலைத்திடட்டும் நேசமும் நிம்மதியும்.

## சனவரி 22 காலை முதல் மதியம் 2.30 வரை

இந்தியாவில் மரணம்
தடை செய்யப்படுகிறது
உயிர்ப்பின் உணர்வை நசுக்கிவிட்டு
உயரற்றவனைப் போற்றிப் புகழ்ந்தே
இறப்பையும் தடைசெய்யும்
இழிவான செயலை எப்படி ஏற்பது
வாழும் மனிதனை வாழ விடாமல்
நாளும் பொழுதும் நாமத்தைப் பாடும்
வேடிக்கை மனிதர்களை
எப்படி மன்னிப்பது
உனக்கான மண்ணில்
உன்னை ஏற்றியவனை
உயர்த்தப் பார்க்கும் அரசை
நிர்வகிப்பதை விடுத்து
மலிவான அரசியலில் மனிதனை
மரணிக்கவிட்டு
சுடுகாட்டில் கோவிலைக்
கும்பிடலாமென
கடவுளெனக் கல்லை ஆராதிப்பதில்
என்ன பலனை எதிர்பார்க்கிறீர்
ஆள்வோரே.

— இளையவன் சிவா,
நரசிங்காபுரம்.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.